வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 27.03.2024 புதன்கிழமை இதழ் : 87 பக்கங்கள் : 12




# வட, கிழக்கில் காணி அபகரிப்பால் சமூகங்களிடையே பதற்றநிலைமை!

## பிரிட்டனின் பொதுநலவாய பணிமனை

- சிறுபான்மையினர்மீது கண்காணிப்பு - ஒடுக்குமுறை
- போராட்டங்கள், நினைவேந்தல்கள்மீது அடக்குமுறை

கொழும்பு, மார்ச் 27

**இலங்கையின் வடக்கு, கிழக்கில் காணி அபகரிப்புகள் அதிகரித்து வருகின்றன. இவை, மத வழிபாட்டு தலங்களை இலக்கு வைத்த வையாக உள்ளன. இவ்வாறான செயல்பாடுகள் சமூகங்களிடையே பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளன என்று பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி பணிமனை தெரிவித்துள்ளது.**

அத்துடன், வடக்கு, கிழக்கில் வாழும் சமூகங்கள் படைத் தரப்பினரின் தொடர் கண்காணிப்பு, ஒடுக்குமுறைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றன என்று அந்தப் பணிமனை

11



## கீரிமலை காணி சுவீகரிக்கும் முயற்சிக்கு மக்கள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 27

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள காணியைச் சுவீகரிப்பதற்கு எதிராக நேற்று மக்கள் கூடி எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்ப்பால், காணி அளவீட்டு முயற்சியை கைவிட்டு நில அளவைத் திணைக் களத்தினர் அங்கிருந்து சென்றனர்.

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள

11

## முருகன் உள்ளிட்ட மூவருக்கும் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன

### விரைவில் இலங்கை திரும்புவர்

சென்னை, மார்ச் 27

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலையான முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் ஆகியோர் இலங்கை செல்வதற்கான கடவுச்சீட்டுகளை இலங்கை துணைத் தூதரகம் வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு அரசு தெரிவித்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களில் பேரறிவாளன் முன்னரும், ஏனைய ஆறு பேரும் கடந்த வருடம் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

11

ஈஸ்டர் தாக்குதல் குறித்த சர்ச்சை:

## மைத்திரி தனது வாக்குமூலத்தில் தகவல் அளித்தவரை கூறவில்லை?

கொழும்பு, மார்ச் 26

ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் தொடர்பில் தனக்கு தகவல் அளித்தவர் குறித்து எந்த விடயங்களையும் சி. ஐ. டியினருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் யார் என்பது தனக்கு தெரியும் என மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்தார். இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவரிடம் சி. ஐ. டியினர் சுமார் 6 மணிநேரம் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

முன்வாசல் வழியாக வந்த

11

## ஊதிய உயர்வு வழங்கியதற்காக நான் பதவி விலகப்போவதில்லை

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, மார்ச் 27

எனது ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து நான் விலகப் போவதில்லை என்று நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், எனக்குக் கீழ் பணிபுரியும்

11

## அக்குபஞ்சர் சிகிச்சை பெற்றவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 27

முழங்கால் வலிக்கு அக்குபஞ்சர் சிகிச்சை பெற்றவர் கிருமி தொற்று ஏற்பட்டதால் உயிரிழந்தார்.

சமூகவலைத்தளத்தில் வெளியான விளம்பரங்களை நம்பி, யாழ். நகருக்கு அண்மையாக பிறவுண் வீதியில் இயங்கும் அக்குபஞ்சர் நிலையத்தில் சிகிச்சை பெற்றவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அச்சுவேலி கிழக்கை சேர்ந்த மாணிக்கம் சற்குணராஜா (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார்.

அந்த சிகிச்சை நிலையத்தில் அவருக்கு இரு முழங்கால்களிலும் ஊசிகளால் குத்தி சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் இதனால் கடும் வலிகள் ஏற்பட்டமையால் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர்

11

மீனவர்கள் விவகாரம்:

## இந்தியா - இலங்கை கூட்டு குழு கூடுகிறது!

சென்னை, மார்ச் 27

இந்தியா - இலங்கை மீனவர்களின் பிரச்னை தொடர்பில் ஆராய்வதற்காக இரு நாடுகளும் இணைந்த கூட்டு செயல்குழு விரைவில் கூடவுள்ளது என்று இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மீனவர் நலன்புரி (Fishermen Care) என்ற தனியார் அமைப்பு தாக்கல் செய்த பொதுநல வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவுக்கு பதிலளிக்கும் வகையில்

11

## சகல தேவாலயங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

கொழும்பு, மார்ச் 27

நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ மக்களின் புனித வெள்ளி நாளை மறுதினமாகும். இதைத் தொடர்ந்து 31ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினக் கொண்டாட்டமாகும். இதை முன்னிட்டே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் உத்தரவின்பேரில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக் கையில் தேவாலயங்களில் கூடும்

11

## கெஹலியவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க மேல்நீதிமன்று அனுமதி

கொழும்பு, மார்ச் 27

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை தொடர்ந்தும் விசாரிப்பதற்கு மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கெஹலிய உட்பட இருவருக்கு எதிராகத் தொடுக்கப் பட்ட இந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுக்க முடி யாது என பிரதிவாதிகள்

11

## 'கோப்' குழுவிலிருந்து ஐவரே உத்தியோகபூர்வமாக விலகல்!

கொழும்பு, மார்ச் 27

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்ற தெரிவுக் குழு எனப்படும் 'கோப்' குழுவில் இருந்து இதுவரை ஐவர் மாத்திரமே உத்தியோகபூர்வமாக பதவி விலகினர் என்று பாராளுமன்றம் தெரிவித்துள்ளது.

கோப் குழுவிலிருந்து விலகியதாக அறிவித்த உறுப்பினர்களில் 5 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தமது பதவி விலகலை எழுத்துமூலம் அறிவித்தனர் என்று பாராளுமன்றின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டிலான் பெரேரா, துமிந்த திசாநாயக்க, எரான் விக்கிரமரத்ன, எஸ். எம். மரிக்கார் மற்றும் சரித ஹேரத் ஆகிய

11

## இப்படியும் நடக்கிறது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் இப்போது நாடு முழுவதும் பேசுபொருள் ஆகியிருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மையான குற்றவாளிகளைத் தனக்குத் தெரியும் என்று அவர் திடீரென்று ஒரு 'குண்டை' போட்டதுமே அவர் ஏதோ நகைச்சுவை செய்கிறார் என்றே பலரும் நினைத்தனர். ஆனால், அவரோ அதனை மீண்டும் அறிவித்ததோடு தனது உயிருக்கு உத்தரவாதம் தந்தால் அதுகுறித்த விபரங்களை வெளியிடுவேன் என்றும் கூறினார்.

இப்படி அவர் அறிவிப்புக்களைச் செய்து கொண்டிருந்த போதுதான் பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

அப்போது அவர் ஜனாதிபதியாக பதவியில் இருந்தார். அவரின் மூத்த மகள் சதுரிகா சிறிசேன ஒரு புத்தகத்தை எழுதியிருந்தார். 'ஜனாதிபதி தாத்தா' என்பது புத்தகத்தின் தலைப்பு. அதாவது 'எனது தந்தை, ஜனாதிபதி' என்பது அதன் தமிழாக்கம்.

அந்த நூல் வெளிவந்த அந்தக் காலத்தில் அதில், அவர் எழுதிய விடயங்கள் பல அவ்வப்போது செய்திகளாக வந்தன.

தனது தந்தையின் பிடிவாத குணம் பற்றி ஓரிடத்தில் எழுதிய அவரின் மகள், அவர் பால்ய வயது சிறுவனாக இருந்தபோது அவர் தனது தந்தையுடன் எதற்காகவோ சண்டைபிடித்துக் கொண்டு, அவரது நெல் வயலை தீயிட்டு கொழுத்தினாரென்று எழுதியதாக அப்போது செய்திகள் வெளிவந்தன.

அத்தகைய பிடிவாதக்காரரான மைத்திரிபால சிறிசேன, தனக்குத் தெரிந்த இரகசியத்தை இப்போது பொலிஸாரிடம் தெரிவித்திருக்கிறார். சில வாரங்களுக்கு முன்னரே தனக்கு அந்த தகவல் தெரியவந்ததாகக் கூறியிருக்கும் அவர், என்ன கூறினார் என்பது இதுவரை வெளியே வரவில்லை.

இதற்கு முன்னரும் ஒருவர் தனக்குத் தெரிந்தது என்று சில தகவல்களை வெளியிட பிரிட்டனின் பிரபல தொலைக்காட்சி ஒன்று அதனை ஆவணமாக வெளியிட்டிருந்தது. பிள்ளையான் என்று அறியப்பட்ட தற்போதைய இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் உதவியாளராக இருந்த மௌலானா என்ற நபர், சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரிய பின்னர், தெரிவித்த அந்த தகவல்களில் மிக முக்கியமானதுதானே அந்தத் தற்கொலைதாரிகளை இலங்கையின் மூத்த புலனாய்வு அதிகாரியான சுரேஸ் சாலே என்பவருக்கு அறிமுகம் செய்துவைத்ததாக அவர் கூறியதே அவரது சாட்சியத்தில் 'கிளைமாக்ஸ்' ஆனால், அந்த நாட்களில் அவர் குறிப்பிட்ட அந்தப் புலனாய்வு அதிகாரி மலேசியாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் இரண்டாம் நிலை அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தார். அதாவது அவர் மலேசியாவில் இருந்தார். அது ஒன்றே அவரின் சாட்சியத்தை கவனிக்காமல் செய்தது.

இப்போது மைத்திரிபால சிறிசேன என்ன தகவலை சொன்னார் என்பது தெரியவில்லை. அது பற்றிய தகவல்கள் வெளியே வரும்வரை அதுபற்றி நமக்கு தெரியப் போவதில்லை.

ஆனால், அவர் இந்தக் கருத்தை வெளியிட்ட அதே காலத்தில் கனடாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஜே. வி. பி. தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸநாயக்கா ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறார்.

"ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக புதிய விசாரணைகள் தேவையில்லை. இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை நடத்திய குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தற்போது ஓய்வு பெற்று தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். அதன்படி, விசாரணைகளை வழிநடத்திய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி ஒருவர், எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய மக்கள் சக்தியின் ஓய்வுபெற்ற காவல்துறை மன்றத்துக்கு தலைமை தாங்கவுள்ளார். அதனூடாக குற்றவாளிகள் கண்டறியப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வழிசெய்யப்படும்."

அதாவது ஏற்கனவே விசாரணை நடத்திய விசாரணை அதிகாரிகளே உண்மையான குற்றவாளிகளை இனம் கண்டதாகவே இப்போது அநுர கூறியிருக்கிறார்.

அப்படி உண்மையான குற்றவாளிகளை விசாரணை அதிகாரிகள் கண்டுகொண்டிருந்தால் அவர் எதற்காகத் தமது அரசாங்கத்தில்தான் தண்டிக்கப்படுவார்கள் எனக் கூறவேண்டும் என்பது தெரியவில்லை.

அவரின் இந்தத் தகவலை வைத்து அவர் சொல்லும் அந்த அதிகாரியை விசாரணை செய்யவேண்டும் என்று இதுவரை ஏன் யாரும் கேட்கவில்லை என்பது தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# வடக்கில் 2023இல் 52 பேர் படுகொலை!

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கில் கடந்த ஆண்டு மாத்திரம் 52 பேர் படுகொலை செய்யப்பட்டனர் என்று பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள உத்தியோகபூர்வ தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்டதற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள பதிலிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் 52 பேர் கடந்த வருடம் கொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலைகள் தொடர்பான சந்தேகத்தில் 129 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, யாழ்ப்பாணத்தில் 14 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 44 பேர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 11 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

காங்கேசன்துறையில் 5 கொலைகள் இடம்பெற்றன. 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 பேர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 4 கொலைகள் இடம்பெற்றுள்ளன. அத்தடன், அங்கு 11 பேர் கைது செய்யப்பட்டனர். 6 பேர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 8 கொலைகள் இடம்பெற்றன. சந்தேகத்தின் அடிப்படையில் 17 பேர் கைதாகினர். 4 பேர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 கொலைகள் இடம்பெற்றன. சந்தேகத்தின் அடிப்படையில் 11 பேர் கைதாகினர். 7 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 13 கொலைகள் இடம்பெற்றுள்ளன. சந்தேகத்தின் அடிப்படையில் 37 பேர் கைதாகினர். 5 பேர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்

கொழும்பு, மார்ச் 27

எதிர்வரும் ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என கொழும்பு உயர் அரசியல் வட்டாரம் மூலம் தெரிய வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 17 - ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதி நவம்பர் 17ஆம் திகதிக்கு முன்னர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் எனவும் சட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் நவம்பர் 18 ஆம் திகதிக்கு பின்னர் தற்போதுள்ள அரசாங்கம் சட்டபூர்வமானதாக அமையாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# கோட்டை நீதிவானை கொலை செய்ய முயற்சி!

## விசாரணைகளுக்கு பணிப்பு



கொழும்பு, மார்ச் 27

கோட்டை நீதிவான் திலின கமகேவை கொலை செய்ய முயற்சித்தமை தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உளவாளி ஒருவரால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அமைச்சர் டிரான் அலஸ் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

நீதிவான் திலின கமகேவை கொல்வதற்காக ஒருவர் தொலைபேசி ஊடாக துப்பாக்கியை கோரியுள்ளார் என்று அரச உளவாளி ஒருவருக்கு கிடைத்த தகவலுக்கமையவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த நபரின் தொலைபேசி இலக்கங்களுடன் விபரங்களை உளவாளி வழங்கியுள்ளதுடன், அந்த தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

# குறைந்தபட்ச ஊதியமாக 17,500 ரூபாய் நிர்ணயம்!

கொழும்பு, மார்ச் 27

தேசிய ஊதிய சட்டத்தின் படி நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் 17 ஆயிரத்து 500 ரூபாயாக நிர்ணயிக்கப்படவுள்ளது.

தேசிய ஊதிய சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டவிதிகளின்படி, தேசிய குறைந்தபட்ச ஊதியமான 12 ஆயிரத்து 500 ரூபாயை 17 ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையின் பரிந்துரைப்படி தேசிய குறைந்தபட்ச தினக்கூலியும் 500 ரூபாயில் இருந்து 700 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது.

## பாதாள உலகக் குழுவின் 63 உறுப்பினர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 27

மேல் மற்றும் தென் மாகாணங்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட 'யுக்திய' விசேட நடவடிக்கையில் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடைய 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மார்ச் மாதம் 19ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், நேற்று நள்ளிரவு வரையான 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பாதாள உலகக் குழுவை சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

மற்ற குற்றங்களுடன் தொடர் புடைய மேலும் ஆறு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.03.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜே. வி. பியின் நிலைப்பாடு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸநாயக்க கனடாவில் மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டிருக்கின்றார். இதன்போது, மாகாண சபை தமிழ் மக்கள் போராடிப் பெற்றது. அதனை நடைமுறைப்படுத்துவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று அவர் தெரிவித்திருக்கின்றார். அண்மையில், வடக்குக்கு வந்திருந்த அநுரகுமார திஸநாயக்க தங்களுடைய அரசாங்கத்தில் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் இருப்பார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களால் தமிழ் மக்களின் பிரச்னை தீர்ந்துவிடும் என்றால் டக்ளஸ் தேவானந்தா நீண்டகாலமாக அமைச்சராக இருக்கின்றார். வடக்கு மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டல்லவா இருந்திருக்க வேண்டும் - இங்கு பிரச்னை வடக்கு அல்லது கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருப்பதல்ல. மாறாக, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான நியாயமான அரசியல் தீர்வை காண்பதற்கான அரசியல் உறுதிப்பாட்டை தென்னிலங்கை காண்பிக்க வேண்டும்.

இந்த பின்புலத்தில்தான் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பிரதான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இதேவேளை, இதற்கு முன்னர் எப்போதும் எதிர்கொள்ளாத தேர்தல் நெருக்கடியை தென்னிலங்கை எதிர்கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான பங்கை ஆற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பிலும் கரிசனைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜே. வி. பியின் மக்கள் செல்வாக்கு நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக கருத்துகள் வெளியாகிவரும் நிலையில், ஜே. வி. பி. அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமாயினும் தமிழ் மக்களின் வாக்குகள் பிரதானமானவை. இந்த நிலையில்தான் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் தொடர்பில் ஜே. வி. பியின் நிலைப்பாடு உற்று நோக்கப்படுகின்றது.

ஜே. வி. பியின் கடந்த காலம் சிக்கலானது. அனைத்து சிங்களக் கட்சிகளினதும் கடந்தகாலம் சிக்கலானதுதான். அந்த வகையில், ஜே. வி. பி. தொடர்பில் பிரத்தியேகமாக சிந்திக்க ஒன்றுமில்லை. ஆனால், ஜே. வி. பியின் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பதுதான் முக்கியமானது. இதுவரையில் அநுரகுமார திஸநாயக்க தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை பகிரங்கமாக முன்வைக்கவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை - பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலாக முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் அநுரவின் நிலைப்பாடு என்ன? இதற்கு இதுவரையில் பதில் இல்லை. கனடாவில் கூறுவதும் தனிப்பட்ட சந்திப்புகளில் கூறுவதும் - இங்கு ஒரு விடயமல்ல - சிங்கள மக்கள் முன்னிலையில் கூறவேண்டும். அதுதான் ஜே. வி. பியின் உண்மையான நிலைப்பாடு. ஜே. வி. பி. அவ்வாறு தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைக்குமாக இருந்தால், தமிழ் கட்சிகள் ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் தங்களின் நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும். அதன் பின்னர்தான் தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலின்போது எவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியும் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

# சொகுசு பேருந்து மோதியதில் கொடிகாமத்தில் ஒருவர் பலி!

தென்மராட்சி, மார்ச் 27

மீசாலையில் அதிசொகுசு பேருந்து மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10:30 மணியளவில் ஏ-9 வீதியில் மீசாலை வீரசிங்கம் கல்லூரி முன்பாக இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த அதி சொகுசு பேருந்து பாதசாரிக் கடவையில் பிறிதொரு வாகனத்தை வேகமாக முந்திச் செல்ல முற்பட்டது. அப்போது, கிளிநொச்சியிலிருந்து கைதடி நோக்கி மோட்டார் சைக்கிளை மோதியது. இதில், அதனை செலுத்திச் சென்றவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - விவேகானந்த நகரை சேர்ந்த சின்ராசா சுதன்ராஜா (வயது 41) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய பேருந்து நிற்காமல் தப்பியோடிய நிலையில் அதனைத் துரத்திச் சென்ற கொடிகாமம் பொலிஸார் பேருந்தின் சாரதியையும் நடத்துநரையும் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# போலி நோட்டுக்களுடன் தம்பதி கைது!

கொழும்பு, மார்ச் 27

ஐயாயிரம் ரூபா மற்றும் ஆயிரம் ரூபா போலி நோட்டுக்களுடன் இளம் தம்பதியினர் குட்டிகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் குட்டிகல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐயாயிரம் ரூபா போலி நோட்டுக்கள் 5 மற்றும் ஆயிரம் ரூபா போலி நோட்டுக்கள் 5 கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# சுக்கிர வார சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 21

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சுக்கிர வார சிறப்புச் சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப் புலவர் க. கயிலைவாசன் “ஆறுபடை வீடுகளின் சிறப்புகள்” என்னும் விடயப் பொருளில் ஆற்றுவார். (ஐ)

# குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 51 (நேச நாயனார்) நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறை - நாரந்தனை வடக்கு - பண்டாரப்புலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இந்த சொற்பொழிவு நடைபெறும்.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை பிரசங்க பூஷணம் செ. த. குமரன் “சிவனடியார்களுக்கு துணி வழங்கிய நாயனார்” என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை பாதிப்பு!



கிளிநொச்சி, மார்ச் 27

யாழ்ப்பாணம் - வவுனியா இடையேயான ரயில் சேவை நேற்று சில மணி நேரம் பாதிக்கப்பட்டது.

மாட்டுடன் ரயில் மோதியதால் ஏற்பட்ட விபத்தாலேயே இந்த சேவை பாதிப்பு ஏற்பட்டது.

நேற்று காலை இத்தாவில் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 27 புதன்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 14
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழையகடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். மறுக்கப்பட்ட உரிமையை கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு.

**சிம்மம்**
கணவன் - மனைவி அன்யோன்யம் பிறக்கும். தோற்றப்பொலிவுக் கூடும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மரியாதை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். சக அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**விருட்சிகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள்பாராட்டுவார்கள். வியாபாரத்தில் விஐபிகள்வாடிக்கையாளர்கள் ஆவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவுசுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நிதானம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

# தமிழரை மதிக்கக்கூடியவரே பிரதமராக வரவேண்டும்!

## முதலமைச்சர் ஸ்டாலின்

நெல்லை, மார்ச் 27

தமிழகத்தை வெறுக்காத, தமிழர்களை மதிக்கக்கூடியவர் மத்தியில் பிரதமராக வரவேண்டும் - என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென் மாவட்ட வெள்ள பாதிப்புக்கு பிரதமர் மோடி நிதி உதவி வழங்கவில்லை. இரண்டு இயற்கை பேரிடர்கள் வந்த போதும் தமிழகத்துக்கு ஒரு ரூபாய்கூட பிரதமர் மோடி தரவில்லை. தேர்தல் வருவதால் பிரதமர் மோடி அடிக்கடி தமிழகம் வருகிறார்.

நிதி கேட்டும் நீதிமன்றம் செல்ல வேண்டியுள்ளது. பா.



ஜ. க. அரசு ஓரவஞ்சனையுடன் செயல்படுகிறது. வெள்ள நிவாரணத்துக்கு நிதி கேட்டால் பிச்சை என்று மத்திய நிதி மந்திரி ஆணவத்துடன் ஏளனம் செய்கிறார். மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால் அமைதியான இந்தியா, அமளியான இந்தியாவாக மாறும். தமிழகத்தை வெறுக்காத, தமிழர்களை மதிக்கக்கூடியவர் மத்தியில் பிரதமராக வரவேண்டும்.

பா. ஜ. க.வுக்கு வாக்களிப்பது எதிர்கால சந்ததியினருக்கு செய்யும் துரோகம் என்பதை விளக்க வேண்டும். பா. ஜ. கவுக்கு வாக்களிப்பது அவமானம் என்று வாக்காளர்களிடம் எடுத்துரைக்க வேண்டும். கடந்த மூன்று ஆண்டுகால ஆட்சியில் பல திட்டங்களை தி. மு. க. அரசு நிறைவேற்றி இருக்கிறது - என்றார். (ஐ)

# தமிழக அரசியலில் மாற்றம் பா. ஜ. க. தயாராகி விட்டது!

## மத்திய அமைச்சர் முருகன்

நீலகிரி, மார்ச் 26

தமிழக அரசியலில் பெரும் மாற்றம் கொண்டு வருவதற்கு பா. ஜ. க. தயாராகிவிட்டதாக மத்திய அமைச்சர் எல். முருகன் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி நீலகிரியில் பிரசாரம் செய்வதற்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அதோடு தேசிய தலைவர்கள் தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்வதற்கு வர உள்ளனர்.

மதுபான கடைகளை குறைப்போம் என்று ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று அதனை அதிகப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடி போன்ற மக்களின் அடிப்படை வசதிகள்



இருக்கிறதோ இல்லையோ மதுபான கடைகளை திறந்து வைத்துள்ளனர். சமீபத்தில் கூட நாடே அதிர்ச்சிக்குள்ளான போதை கடத்தல் வழக்கில் கூட வழக்கில் தி. மு. க., விடுதலை சிறுத்தைகள் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர் - என்றார். (ஐ)

# தமிழகம் வருகிறார் ராகுல்

சென்னை, மார்ச் 27

தமிழகத்தில் இந்தியா கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே ஆகியோர் தமிழகம் வரவுள்ளனர்.

ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகிறார்கள்.

தமிழகத்தில் நடைபெறும் 2 பொதுக்கூட்டங்களில் பங்கேற்க ராகுல் காந்தி திட்டமிட்டுள்ளார் என்று தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். (ஐ)

# மாற்று சின்னம் கேட்கின்றது நாம் தமிழர்!

சென்னை, மார்ச் 26

பாராளுமன்ற தேர்தலில் சீமானின் நாம் தமிழர் கட்சி தமிழகம் மற்றும புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தது.

தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னத்தை ஒதுக்க தேர்தல் ஆணையம் மறுத்துவிட்டது.

இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில், நாம் தமிழர் கட்சிக்கு ஒலிவாங்கி (மைக்) சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்கிறது.

இந்நிலையில், தங்களுக்கு வேறு சின்னம் ஒதுக்கி தரும்படி நாம் தமிழர் கட்சி தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைத்துள்ளது. ஒலிவாங்கி சின்னத்துக்கு பதிலாக படகு அல்லது பாய்மரப் படகு சின்னத்தை நாம் தமிழர் கட்சி கோரியுள்ளது. (ஐ)

# தமிழ் வாசிக்க தெரியாத நாம் தமிழர் வேட்பாளர்!

சென்னை, மார்ச் 26

வேட்பு மனு தாக்கலில் ஆட்சியர் உறுதிமொழி படிவத்தை வாசிக்கச் சொன்னபோது ஹதமிழ் தெரியாது“ என்று விருதுநகர் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கூறினார். இதையடுத்து ஆட்சியர் வாசிக்க, பின் தொடர்ந்து உறுதிமொழியை ஏற்றுக்கொண்டார்.

விருதுநகர் மக்களவைத் தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சியின் கௌசிக் என்பவரே இவ்வாறு சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

மேடைக்கு மேடை தமிழ் குறித்து முழங்குகிறார் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான். ஆனால், அவரின் கட்சியின் வேட்பாளருக்கு தமிழ் தெரியாது என்று பிற கட்சிகள் கூறியுள்ளன. இதைத் தொடர்நது இந்த விவகாரம் தற்போது தமிழகத்தில் விறுவிறுப்பான விவாதப் பொருள் ஆகியுள்ளது. (ஐ)

# தேவையானவற்றை டில்லியில் சண்டையிட்டு பெற்று தருவேன்!

கோவை, மார்ச் 27

தொகுதிக்குத் தேவையானதை டில்லியில் சண்டையிட்டு பெற்றுத் தருவேன் என்று தமிழ்நாடு மாநில பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நேற்று பிரசார கூட்டத்தில் பங்கேற்ற அவர்,

அரசியலில் நான் விடுமுறை எடுத்ததே இல்லை, என் அம்மாவை பார்த்து 2 மாதங்கள் ஆகிவிட்டன. தொகுதிக்குத் தேவையானதை டில்லியில் சண்டையிட்டு பெற்றுத் தருவேன்.

இப்போது மாற்றம் இல்லையென்றால், எப்போதும் இல்லை என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன். அரசியல் கட்சிகளுடன் சண்டையிடுவதற்காக நான் தேர்தலில் போட்டியிடவில்லை - என்றார். (ஐ)

# தேர்தலைப் பிற்போட்டால் மக்கள் வீதிக்கு இறங்குவர்!

## பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 27**
**அரசாங்கம் அரசமைப்பை மீறி ஜனாதிபதி தேர்தலை பிற்போட்டால் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச முதலில் பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் என வெளியிட்ட கருத்திற்கு ரோகண ஹெட்டியாராச்சி இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் அரசியல் கட்சிகளுக்கானதோ அரசாங்கத்திற்கானதோ அல்லது அரசியல் தலைவர்களுக்கானதோ அல்ல. மக்களுக்கானது. ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்குள் நடைபெறவேண்டும்.

ஜனாதிபதியோ அமைச்சரவையோ பசில்ராஜபக்சவோ அதனை மாற்ற முடியாது. இந்த காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பில் அரசாங்கம் எந்த தீர்மானங்களை எடுக்க முடியாது.

அவர்கள் ஏதாவது காரணத்திற்காக அரசமைப்பை மீறி செயற்பட முடிந்தால் வீதிக்கு இறங்குவதற்கான வலு எங்கள் மக்களுக்குள்ளது-என்றார். (அ)

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் நால்வரை தேடும் பொலிஸார்!

கொழும்பு, மார்ச் 27
எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் 14 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சகோதரர்கள் உட்பட நான்கு சந்தேக நபர்களை கைது செய்வது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள்,சிறுமியுடன் முகநூல் மூலம் அறிமுகமானவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுற்றுலா வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 27
வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலா வருமானம் நாட்டில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 964 மில்லியன் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், தற்போது 2 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதாகக் குறிப்பிடும் இலங்கை மத்திய வங்கி, கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருமானம் 687 மில்லியன் எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# மன்னாரில் குடிதண்ணீர் விநியோக திட்டம் திறப்பு!



மன்னார், மார்ச் 27
தேசிய நீர் தினத்தை முன்னிட்டு 'பசுமையான தேசம் சுபீட்சமான நாளை' எனும் தொனிப் பொருளில் மன்னார் மடு வலயத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் மடு வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இதன் போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். மன் - கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் சுமார் 3 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்திய உயர்ஸ்தானிகரினால் வழங்கப்பட்ட புத்தக பைகள், தரம் 10 கல்வி கற்கும் 477 மாணவர்களுக்கான வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# வெளிப்படைத்தன்மையான விசாரணை நடத்தவேண்டும்!

கொழும்பு, மார்ச் 27
"ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணி தொடர்பாக புதிய கதைகளை வெளியிடாமல் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டும்" என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அம்பலாந்தோட்டையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விசாரணைகளுக்காக




பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு பதிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவது சிறந்தது. வெளிப்படையான மற்றும் நேர்மையான விசாரணையை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம்.

தற்போதைய ஜனாதிபதி ஸ்கொட்லாந்து யார்ட் பொலிசாரை அழைத்து விசாரணைகளை நடத்துவதாக கூறியிருந்த போதிலும் இதுவரையில் அதற்கான எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை தேடுவதில் அவருக்கு நாட்டமில்லை என தோன்றுகிறது.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மூடி மறைக்கின்றமை மற்றும் ஈடுபாடு காட்டாமை என்பன பல கேள்விகளையும், சந்தேகமும் இன்று நாட்டில் தோற்றுவித்துள்ளது-என்றார். (அ)

# தேங்காய்களுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி மாவட்டத்தில் வெண் ஈ இன் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தேங்காய் கொள்வனவாளார்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வெண் ஈ இன் தாக்கம் காரணமாக பலரது தென்னை தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மரங்களில் சிறு குரும்பைகூட இல்லாத நிலையில் நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது.

தற்பொழுது கிளிநொச்சி சேவை சந்தையில் ஒரு தேங்காயின் விலை 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் அறுவடை செய்கின்ற தேங்காயை விட நான்கில் ஒரு பங்கு மாத்திரமே தற்பொழுது அறுவடை செய்யப்படுவதாக தென்னை உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். எதிர்வரும் காலங்களில் மாதங்களில் தேங்காய் ஒன்று 200 முதல் 300 ரூபாய்கு விற்பனை செய்யும் நிலை ஏற்படக்கூடும் எனவும் தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மைத்திரி வழங்கிய வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு, மார்ச் 27
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய, வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் நேற்று முன் தினம் சுமார் 6 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், அவரது வாக்குமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தொடர்பான உண்மைகள் தமக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி கண்டியில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, குறித்த கருத்து தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்ததை அடுத்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி, வாக்குமூலம் வழங்கிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பொருளாதார வளர்ச்சி 4.5 சதவீதமாக அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 27
கடந்த காலத்தின் இறுதி காலாண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற நாணய கொள்கை மீளாய்வு கூட்டத்தின் போது, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கடந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை விட இது 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் 4.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# எந்த தேர்தல் நடைபெற்றாலும் எதிர்கொள்ள மொட்டு தயார்!

## இராஜாங்க அமைச்சர் அநுராத

கொழும்பு, மார்ச் 27

**அடுத்து என்ன தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன கட்சி தயாராகவே உள்ளது என்று நீதி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுன கட்சியின் கண்டி மாவட்ட கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், இடதுசாரி கட்சிகள் தேர்தலின்போது ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மே தினக் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் பற்றியே இன்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது எனவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அதேவேளை, இதன்போது கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, பொதுஜன பெரமுன கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு, கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெறும் என்று கூறினார். (அ)

# தனது அரசியல் இலாபத்தை எதிர்பார்க்கிறாரா மைத்திரி?

## கத்தோலிக்க திருச்சபை கேள்வி

கொழும்பு, மார்ச் 27

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி தொடர்பில் அவசர அவசரமாக அறிக்கைகளை வெளியிட்டு அரசியல் இலாபத்தை எதிர்பார்க்கிறாரா என கத்தோலிக்க திருச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்களை வைத்து அரசியல் இலாபத்தை தேடவேண்டாம் என கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூட் கிரிஷாந்த தெரிவித்துள்ளார்.

அப்படிப்பட்ட ஒரு மாயையில் மக்கள் விழ மாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் 90 வீதத்துக்கும் அதிகமாக நிறைவடைந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன கூறிய தகவல்கள் அவற்றில் வெளியாகியுள்ளனவா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

# நீதிமன்றில் ஆவணங்கள் விழுங்கிய பெண் சட்டத்தரணி தகுதி நீக்கம்!

கொழும்பு, மார்ச் 27

கெக்கிராவ நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்பான அத்தியாவசிய ஆவணங்களை கிழித்து, மென்று தின்றுவிட்டதாக தொடரப்பட்ட வழக்கில், பெண் சட்டத்தரணிக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரை அவர் சட்டத்தரணியாக பணியாற்றுவதற்கான தகுதியை நிறுத்தி வைக்க உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டது.

அந்தச் சம்பவத்தின் காரணமாக பெண் சட்டத்தரணி, சட்டத்தரணியின் நெறிமுறைகளை மீறியதாகத் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நீதிமன்ற ஊழியர்கள் முழு சம்பவத்தையும் வீடியோ எடுத்து கெக்கிராவ பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து கெக்கிராவைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி பொலிஸாரால் முன்னர் கைது செய்யப்பட்டார்.

தனக்கு எதிராக கெக்கிராவ மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு தொடர்பான அசல் ஆவணங்களை சட்டத்தரணி மென்று விழுங்க முயற்சித்துள்ளார்.

இதே சம்பவத்திற்காக இந்த சட்டத்தரணிக்கு எதிரான குற்றவியல் வழக்கும் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாக அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தரணிக்கு எதிரான வழக்கு மிகவும் தீவிரமானது என்று சுட்டிக்காட்டிய நீதிபதிகள் குழு, எந்தச் சூழ்நிலையிலும் இதுபோன்ற செயல்களைச் செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தியது.

அப்போது அவர் மீதான வழக்கு விசாரணை முடியும் வரை அவரது சட்டத்தரணி தகுதியை நிறுத்தி வைக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர். (அ)

# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் தாயகம் திரும்ப ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 27

மியன்மாரில் பயங்கரவாதிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள எட்டு இலங்கையர்கள் தாய்லாந்து ஊடாக தாயகம் திரும்புவதற்கு தயாராகி வருகின்றனர்.

மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜனக பண்டார இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர்களின் பயணத்தை எளிதாக்கும் நோக்கில் தாய்லாந்து அதிகாரிகள் அவர்களுக்கான போக்குவரத்து விசாக்களை வழங்கியுள்ளனர்.

மியன்மாரின் தாய்லாந்து எல்லைக்கு அருகே பயங்கரவாத குழுவொன்றின் சைபர் அடிமைகளாக இலங்கை இளைஞர்கள் 56 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக அண்மையில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

தாய்லாந்தில் கணினி துறையில் தொழில்களை பெற்றுத் தருவதாக கூறி அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையின் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் சிலர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும், இந்த நபர்கள் இணையக் குற்றங்களில் ஈடுபடுவதும் கண்டறியப்பட்டது. எவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 8 பேரை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தற்போது, குறித்த 8 பேரும் மியன்மாரின் மியாவாடியில் உள்ள மத்திய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏனையோரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாய்லாந்து எல்லைக்கு அருகில், சுமார் 5 கிலோமீற்றர் தொலைவில் தற்போது மேலும் 18 இலங்கையர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். (அ)

# மாவட்ட செயலாளர்களினூடாக பெரும்போக நெல் கொள்வனவு

கொழும்பு, மார்ச் 26

பெரும்போக நெல் கொள்வனவை மாவட்ட செயலாளர்களினூடாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டரிசி நெல் ஒரு கிலோகிராம் 105 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் மாவட்ட செயலாளர்களைத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நாளை இடம்பெறவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

# தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட உயிரினங்கள்!

கொழும்பு, மார்ச் 27

தாய்லாந்தில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான 88 உயிருள்ள விலங்குகளுடன் இளம் வர்த்தக தம்பதி கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளை, புவக்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 35 வயதுடைய தம்பதியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டம், விலங்கு நோய்கள் சட்டம் மற்றும் சுங்க கட்டளைச் சட்டத்தை மீறி குறித்த உயிரினங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுங்கத்தின் வருவாய் கண்காணிப்பு பிரிவு அதிகாரிகள், சுங்கத்தின் பல்லுயிர் பிரிவு அதிகாரிகள் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் விலங்குகள் தனிமைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுச் சோதனையின் போது இது இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் பிற்பகல் தாய்லாந்தின் பேங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானமான யு.எல்-405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாக குறித்த தம்பதியினரால் கொண்டுவரப்பட்ட தட்டான், தவளை, மீன், குளவி, அணில், ஆமை, பல்லிகள், வௌவால், சாலமண்டர், அரிய வகை புழு, எலி போன்றவற்றை காற்றோட்டத்திற்காக தயார் செய்யப்பட்ட சிறிய பிளாஸ்ரிக் பெட்டிகளில் அடைத்து கொண்டுவந்துள்ளனர்.

குறித்த தம்பதியை சுங்க அதிகாரிகள் கைது செய்து மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்ட விலங்குகளை கட்டுநாயக்க விமான நிலைய விலங்குகள் தனிமைப்படுத்தல் நிறுவனத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)







# வடக்கு விவசாயிகளின் மின் கட்டணத்தை குறைப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம்!

*அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 27

**வடபகுதி விவசாயிகளின் மின்கட்டணத்தை குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



விவசாயம் தொடர்பில் வடபகுதி விவசாயிகள் காண்பிக்கும் அர்ப்பணிப்பை கருத்தில்கொண்டே இந்த நடவடிக்கை என அமைச்சர் கூறினார்.

விவசாய அமைச்சிற்கு ஒதுக்கப்படும் நிதியில் அதிகளவான நிதியை வடக்கு - கிழக்கு அபிவிருத்தி திட்டங்களிற்கு ஒதுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

30 வருடகால யுத்தத்தினால் வடபகுதி மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். ஆனால் இந்த நெருக்கடிகளின் மத்தியிலும் அவர்கள் விவசாயத்தை கைவிடவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் மகிந்த அமரவீர, வடபகுதி விவசாயிகள் மின்கட்டண நிவாரணங்களை கோரியுள்ளனர்.

இதனடிப்படையில் அவர்களின் மின் கட்டணங்களை குறைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (அ)

# மீன் வலையில் சிக்கி இளைஞன் மரணம்!

மட்டக்களப்பு, மார்ச் 27

வாழைச்சேனை, புனானி ஏரியில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் தான் பயன்படுத்திய மீன்பிடி வலையில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில், உயிரிழந்தவரின் தந்தை வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் மாலை செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புனானி, மயிலதென்ன, அத்தே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சுகயீனம் காரணமாக வீட்டில் வேலையில்லாமல் இருந்ததாகவும், புனானி ஏரியில் மீன்பிடிப்பதற்காக மீன்பிடி வலையை எடுத்து சென்ற நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் நீதவான் பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சொந்த இடங்களில் பொலிஸார் கடமை புரிவதற்கு வருகிறது தடை

கொழும்பு, மார்ச் 27

பொலிஸ் பொறுப்பதிகாரி முதல் கான்ஸ்டபில் வரையிலான பதவிகளை வகிப்போர் எவரையும் தங்களது ஊரிலோ தங்களது மனைவியின் பிரதேசத்திலோ கடமை புரிய அனுமதிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தற்போது இவ்வாறு கடமை புரிவோர் தொடர்பிலும் பூரண அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# பொலிஸார் - பொதுமக்கள் களுத்துறையில் மோதல்

கொழும்பு, மார்ச் 27

களுத்துறை நகரின் மையப் பகுதியில் மக்கள் இயக்கத்தின் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே நேற்று மோதல் நிலைமை ஏற்பட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வு, வரி அதிகரிப்பு,மின்சாரக் கட்டண உயர்வு பயங்கரவாத தடைச் சட்டத் திருத்தம் சட்டம் , போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தல் உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்ட இயக்கத்தினர் பிரதான பஸ் நிலையம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

காலை முதல் களுத்துறை நகர் மற்றும் களுத்துறை நகர் அண்டிய பிரதேசங்களிலும் பொலிஸாரின் விசேட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த தோடு போராட்டம் மேற்கொண்ட பகுதியிலும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது இரு தரப்பினரிடையே இவ்வாறான மோதல் நிலைமை தோன்றியிருந்தது. (அ)

# விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றது வாகனம்

## பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணொருவரை ஹயஸ் ரக வாகனம் ஒன்று மோதி விட்டு தப்பி சென்றுள்ளது.

விபத்தில் துன்னாலை மேற்கை சேர்ந்த குமரேசமூர்த்தி வனிதா (வயது 51) எனும் பெண்ணே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மந்திகை பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி கிளைக்கு அருகில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரதான வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன், விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பி சென்ற ஹயஸ் வாகனத்தை அடையாளம் கண்டுள்ளதாகவும், அதன் சாரதியை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கென்யா சென்றார் சவேந்திர சில்வா

கொழும்பு, மார்ச் 27

கென்யாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பிரதானி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நைரோபியிலுள்ள அந்நாட்டு பாதுகாப்புத் தலைமையகத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு ஜெனரல் சவேந்திர சில்வாவை கென்யாவின் பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஜெனரல் பிரான்சிஸ் ஒகோல்லா வரவேற்றார்.

சவேந்திர சில்வா கென்ய பாதுகாப்பு படையின் தலைவர், பாதுகாப்புப் படையின் துணைத் தலைவர், சேவைத் தளபதிகள் மற்றும் கென்யா பாதுகாப்புப் படைகளின் ஜெனரல் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

கென்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு இராணுவ உறவுகளை வலுப்படுத்துதல், கூட்டு இராணுவப் பயிற்சிகளை நடத்துதல், இராணுவத் திறனை மேம்படுத்துதல் மற்றும் சமாதான ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபாடு போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளும் தங்களின் மனித வளத்தை மேம்படுத்துவதில் மட்டும் அல்லாமல், தங்கள் செயல்பாடுகளை நவீனமயமாக்குவதிலும் நெறிப்படுத்துவதிலும் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்வதில் இரு இராணுவத் தலைவர்களும் தங்கள் உறுதிப்பாட்டை எடுத்துரைத்தனர். (அ)

# காத்தான்குடியில் கைதான 30 பேரும் நேற்று விடுதலை

அம்பாறை, மார்ச் 27

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பூர்க்கான் பள்ளிவாயல் வீதியிலுள்ள பின்வளவில் இம்மாதம் 2ஆம் திகதி சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர் என காத்தான்குடி பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்த 30 பேரும் நீதவான் நீதிமன்றினால் நேற்று செவ்வாய்க்கிழமை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணிகளான முகைதீன் சாலி, நௌசர், நிப்ராஸ், அப்ரா, றம்சியா ஆகியோர் ஆஜராகி தமது வாதங்களை முன்வைத்தனர்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம் எச்.எம்.ஹம்ஸா விடுதலை செய்தார். (அ)

# ஏற்றுமதிக்கு தயாராகவிருந்த கழிவு தேயிலை ஏற்றிய 3 கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டன!

கொழும்பு, மார்ச் 27

ஏற்றுமதிக்காக தயாராகவிருந்த கழிவு தேயிலை கொண்ட 3 கொள்கலன்கள் இலங்கை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கழிவுத் தேயிலை ஏற்றுமதி செய்யவிருந்தபோதே இவற்றைக் கைப்பற்றியதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரமும் இதே போன்று ஏற்றுமதிக்காக தயாராகவிருந்த கழிவு தேயிலை கொண்ட நான்கு கொள்கலன்களை இலங்கை சுங்கம் பொறுப்பேற்றதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ)

# குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை மீளாக்கம் செய்ய அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 27

குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தை மீளாக்கம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும், குறித்த திருத்தங்கள் மூலம் சட்டத்தின் பிரிவுகள் அதிகளவில் திருத்தப்படவுள்ளமையால், பொது மக்களுக்கு இலகுவாகப் புரிந்து கொள்வதற்காக தற்போது வலுவாக்கத்திலுள்ள சட்டத்தை இரத்துச் செய்து, ஏற்புடைய அனைத்துத் திருத்தங்களையும் உட்சேர்த்து இச்சட்டத்தின் தற்போதைய பெயரின் கீழ் புதிய சட்டமொன்றை உருவாக்குவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் புதிய சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இரண்டாவது நாளாக நேற்றும் கல்முனையில் ஆர்ப்பாட்டம்!




**அம்பாறை, மார்ச் 27**

**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின்மீதான நிருவாக அடாவடித்தனத்திற்கு எதிராக நீதி கோரி நடாத்தும் மக்கள் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.**

அரசியல்வாதிகளே, அரச அதிகாரிகளே, அமைச்சின் செயலாளரே உங்கள் பதில் என்ன? என்று அங்கு குழுமியிருந்த மக்கள் கேள்வி எழுப்பினார்கள்.

நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களுமாக பிரதேச செயலத்தின் முன்னால் வீதியியருகே அமர்ந்து அமைதியான முறையில் முன்னெடுத்து வருகிறார்கள்.

நேற்று முன்தினத்தை விட நேற்று அதிகளவான பொது மக்கள் அங்கு கூடத்தொடங்கினர்.

பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் கூறுகையில்..

கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளை பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயம்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாக தடுக்கப்பட்டு வருவதுடன் அண்மைக்காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன- என்றனர்.

(அ)



# அம்பாறையில் இரு வாகனங்கள் விபத்தில் சிக்கி நால்வர் காயம்!

அம்பாறை, மார்ச் 27

அம்பாறை மூவங்கலை வீதியில் கெப் வண்டியும் காரொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்து அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கப் வண்டி ஹிங்குராணையிலிருந்து அம்பாறை நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில் அதன் டயர் ஒன்று வெடித்ததால் அதைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது மோதியுள்ளது.

இதன்போது கெப் வண்டியில் பயணித்த நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கல்வி உதவிக்கான காசோலைகள் வழங்கி வைப்பு




அம்பாறை, மார்ச் 27

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அங்கவீனமுற்ற பெற்றோர்களது பிள்ளைகளுக்கான கல்வி உதவிக்கான காசோலைகள் மற்றும் அங்கவீனமுற்றோர்க்கான மருத்துவ போக்குவரத்து உதவிக் கொடுப்பனவிற்கான காசோலைகள், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மட் ஹனீபா அவர்களது தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் ,கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா,சமூக சேவை உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# 16ஆவது நாளாக மூடப்பட்டநிலையில் திருக்கோவில் ஆதர வைத்தியசாலை!

## சந்திப்புகள் தோல்வி; பொதுமக்கள் பாதிப்பு

அம்பாறை, மார்ச் 27

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை தொடர்ந்து 16 வது நாளாக நேற்று செவ்வாய்க்கிழமையும் எவ்வித வைத்திய சேவையுமின்றி மூடப்பட்டு காணப்படுகிறது.

இவ் வைத்தியசாலை திறக்கப் பட வேண்டும் என்று இது வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்து இருக்கின்றன.

இதனால் அந்த நீண்ட பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 32,000 தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்ற திருக்கோவில் ஆதார வைத்தியசாலை மீதான ஆர்ப்பாட்ட சம்பவமே இதற்கு காரணமாக அமைந்திருக்கின்றது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தமது பிடியில் அதாவது சம்பந்தப்பட்ட சகலரையும் கைது செய்ய வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றது.

அதேவேளை வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் கல்முனைம், திருமலை, கொழும்பு என்று சென்று வைத்தியசாலையை எப்படியாவது திறக்க வேண்டும் என்று கடும் முயற்சி எடுத்து வருகின்றனர். மேலும் பிரதேச செயலாளர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் இதற்கு பக்கபலமாக இருக்கின்றனர்.

இதுவரை நடந்த சந்திப்புகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

இதனால் 16 நாட்களாக இன்னும் வைத்திய சாலையை திறக்க முடியவில்லை. பொது மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர். (அ)

# வாழைச்சேனையில் பஸ்ஸுடன் மோ. சைக்கிள் மோதி விபத்து!

## இரு இளைஞர்கள் படுகாயம் !!

மட்டக்களப்பு, மார்ச் 27

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30.மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி - மீராவோடை ஊடாக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபையின் வாழைச்சேனை டிப்போ பஸ் வண்டியில் மோட்டார் சைக்கிள் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.




குறித்த வீதியால் மூன்று மோட்டார் சைக்கிளில் ஓட்டப் பந்தயத்தில் ஈடுப்பட்ட இளைஞர்களே இவ் விபத்தில் சிக்கியுள்ளனர். இதில், இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த விபத்தில் காயமடைந்த ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட நூலகம் திறந்து வைப்பு



அம்பாறை, மார்ச் 27

காத்தான்குடி கல்வி கோட்டத்திலுள்ள காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

செலான் வங்கியின் செலான் பெஹஸர திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட 299 வது நூலகமாக இப் பாடசாலையின் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி நயிமா அப்துஸ் சலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செலான் வங்கி உதவி முகாமையாளர் றுவான் பெர்ணான்டோ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் காத்தான்குடி பிரதேசக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம் உட்பட செலான் வங்கியின் அதிகாரிகள் முகாமையாளர்கள் ஆசியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நூலகத்தின் நினைவுக் கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந்த நூலகத்துக்கு செலான் வங்கியினால் மடிக் கணிணியும் வழங்கப்பட்டது . (அ)

# விராட் கோலி அதிரடி; பெங்களூரு வெற்றி!



பெங்களூரு, மார்ச் 27

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 6ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர். சி. பி.) அணி. இந்தப் போட்டியில் பெங்களூரு வீரர் விராட் கோலி 49 பந்துகளில் 77 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். அதிரடியாக ஆடி இருந்தார் தினேஷ் கார்த்திக்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆர். சி. பி. அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 176 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் தலைவர் ஷிகர் தவன் 45, பிரப்சிம்ரன் 25, லிவிங்ஸ்ரன் 17, சாம் கரன் 23, ஜிதேஷ் சர்மா 27 மற்றும் ஷஷாங் சிங் 21 ஓட்டங்கள் எடுத்தனர். 8 பந்துகளில் 21 ஓட்டங்களை எடுத்திருந்தார் ஷஷாங்.

ஆர். சி. பி. சார்பில் சிராஜ் மற்றும் மக்ஸ்வெல் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி விரட்டியது. அணித் தலைவர் டூ பிளசிஸ் மற்றும் விராட் கோலி இன்னிங்ஸை தொடங்கினர்.

முதல் ஓவரில் 4 பௌண்ட்ரிகளை விளாசி இருந்தார் கோலி. அந்த ஓவரில் கோலியின் பிடி வாய்ப்பை ஸ்லிப்பீல்டர் பெயர்ஸ்ரோ நழுவ விட்டிருந்தார். டூ பிளசிஸ் 3 ஓட்டங்களில் வெளியேறினார். கமரூன் கிறீனும் 3 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

ரஜத் பட்டிதார் மற்றும் கோலி இணைந்து 43 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். பட்டிதார் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மக்ஸ்வெல்லும் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 49 பந்துகளில் 77 ஓட்டங்கள் எடுத்த கோலியை வெளியேற்றினார் ஹர்ஷல் பட்டேல்.

அனுஜ் ராவத் 11 ஓட்டங்களில் வெளியேறினார். அதன் பின்னர் தினேஷ் கார்த்திக் மற்றும் மஹிபால் லோம்ரோர் இணைந்து 48 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர் அது பெங்களூரு அணிக்கு வெற்றி கூட்டணியாக அமைந்தது.

தினேஷ் கார்த்திக், 10 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்தார். லோம்ரோர், 8 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்தார். 19.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது ஆர். சி. பி.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை கோலி வென்றார். (ஐ)



## ரெய்னாவின் சாதனையை முறியடித்தார் விராட் கோலி

பெங்களூரு, மார்ச் 27

அதிக பிடியெடுப்புகள் மூலம் எதிரணியினரை ஆட்டமிழக்க செய்த இந்திய வீரர் என்ற சுரேஷ் ரெய்னாவின் சாதனையை முறியடித்தார் விராட் கோலி.


நடப்பு ஐ.பி.எல். தொடரின் 6ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இதில், பெங்களூாரு அணி வெற்றி பெற்றது.

பெங்களூரு களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது ஷிகர் தவான், ஜொன்னி பெயர்ஸ்ரோ ஆகியோரை பிடியெடுப்பு மூலமாக ஆட்டமிழக்க செய்து அசத்தினார் விராட் கோலி.

இந்த 2 பிடிகளையும் சேர்த்து சர்வதேசம், ஐ. பி. எல். மற்றும் உள்ளூர் ஆகிய அனைத்து வகையான இருபது - 20 கிரிக்கெட்டிலும் இதுவரை விராட் கோலி 173 பிடிகளை பிடித்துள்ளார்.

குறிப்பாக இந்தியாவுக்காக 52 பிடிகளை பிடித்துள்ள அவர் ஐ.பி.எல். தொடரில் பெங்களூரு அணிக்காக 117 பிடிகளையும் மாநில அணிக்காக உள்ளூர் கிரிக் கட்டில் 4 பிடிகளையும் பிடித்துள்ளார். இதன்மூலம், இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக பிடிகளை பிடித்த இந்திய வீரர் என்ற சுரேஷ் ரெய்னாவின் வாழ்நாள் சாதனையை உடைத்த விராட் கோலி புதிய சாதனை படைத்துள்ளார். (ஐ)

## ஐ. பி. எல். இறுதிப் போட்டி சென்னையில் நடக்கும்!




மும்பை, மார்ச் 27

12 ஆண்டுகளின் பின்னர் சென்னையில் ஐ. பி. எல். இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் மீதமுள்ள போட்டிகளுக்கான கால அட்டவணை வெளியானது. இதன்படி, மே 26ஆம் திகதி சென்னையில் ஐ. பி. எல். இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட்டின் 17ஆவது தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இதேசமயம், இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் காலம் என்பதால் இந்திய கிரிக்கெட் சபையின் சார்பில் முதல் 21 போட்டிகளுக்கான கால அட்டவணை மட்டும் வெளியிடப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் திகதிகள் அறிவிப்பைத் தொடர்ந்து மீதமுள்ள ஐ. பி. எல். போட்டிக்கான அட்டவணையை ஐ. பி. எல். நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

ஐ. பி. எல். அட்டவணையின் இரண்டாம் பகுதி, இறுதிக்கு முந்தைய சுற்றுகள் (பிளேஓவ்) உட்பட 52 போட்டிகளை கொண்டுள்ளது. இதில் ஐ. பி. எல். இறுதிப் போட்டி சென்னையில் நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மே 26ஆம் திகதி இறுதிப் போட்டி நடக்கவிருக்கிறது. முன்னதாக, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சென்னையில் ஐ. பி. எல். இறுதிப் போட்டி நடைபெற்றது. தற்போது 12 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை மைதானத்தில் இறுதிப்போட்டி நடக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, மே 21ஆம் திகதி முதல் தகுதிச் சுற்று போட்டியும் மற்றும் மே 22ஆம் திகதி வெளியேற்றும் (எலிமினேட்டர்) போட்டியும் அகமதாபாத்தில் நடைபெறவுள்ளன. மே 24ஆம் திகதி இரண்டாவது தகுதி சுற்று போட்டி சென்னையில் நடைபெறும் என புதிய அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போர்டர் - கவாஸ்கர் கிண்ணம் போட்டி அட்டவணை அறிவிப்பு!

கான்பெரா, மார்ச் 27

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக மோதும் 5 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ளன.

இந்த டெஸ்ட் தொடரின் போட்டி அட்டவணையையும் நடைபெறவுள்ள மைதானங்களையும் கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதன்படி, தொடரின் முதல் போட்டி பெர்த்தில் நவம்பர் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இரண்டாவது போட்டியான பகல் - இரவு டெஸ்ட் போட்டி அடிலெய்ட் நகரின் ஓவல் மைதானத்தில் டிசெம்பர் 6ஆம் திகதி தொடங்குகிறது. 3ஆவது போட்டி டிசெம்பர் 14ஆம் திகதி பிரிஸ்பேன் மைதானத்திலும், 4ஆவது போட்டியான பொக்ஸிங் டே டெஸ்ட் டிசெம்பர் 26ஆம் திகதி மெல்பர்ன் மைதானத்திலும், 5ஆவது டெஸ்ட் போட்டி 2025ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி சிட்னி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ஐ)






## மியாமி சர்வதேச ரென்னிஸ் ஸ்வியாரெக் வெளியேற்றம்!

மியாமி, மார்ச் 27

மியாமி சர்வதேச ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் முன்னணி வீராங்கனை இகா ஸ்வியாரெக் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின் மியாமி நகரில் சர்வதேச ரென்னிஸ் போட்டிகள் நடக்கின்றன.

இதில், நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவுக்கான காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டம் நடந்தது.

இதில், முன்னணி வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

இவர், இந்தப் போட்டியில் ரஷ்யாவின் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவை எதிர்கொண்டார். இதில், 4-6, 2-6 என்ற செற் கணக்கில் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவிடம் தோல்வியடைந்தார். (ஐ)

ஈழநாடு



# வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாட்டில் அபிவிருத்தி ஏற்படமுடியாது!

## சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 27

**வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**

எத்தனை கல்விச் சீர்திருத்தங்களைச் தயார் செய்தாலும், அதற்கேற்ப மனித வளங்களை முகாமைத்துவம் செய்யாவிட்டால், கல்விச் சீர்திருத்தங்கள் பலனளிக்காது எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாடு வெற்றி பெறாது. கல்வித் திட்டங்களை யார் வேண்டுமானாலும் உருவாக்கலாம். ஆனால் அந்தத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மனித வளத்தை நிர்வகிக்க வேண்டும். கடந்த காலங்களில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு வரிசைகள் ஏற்பட்டன. அந்த நிலையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ரணில் விக்ரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இந்நாட்டின் பொருளாதார நிலைமையை குறிப்பிடத்தக்க நிலைக்குக் கொண்டு வர பாடுபட்டார்.

அதற்கு அப்பால் இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு புதிய வேலைத் திட்டம் அவசியம். அதற்காக ஜனாதிபதி தற்போது பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றார். இலங்கை மத்திய வங்கி சுயாதீனமான நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. மத்திய வங்கி விவகாரங்களில் இனி அரசியல்வாதிகள் தலையிட முடியாது என்பதே இதன் பொருள். மத்திய வங்கி நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். மேலும், ஒவ்வொரு நிறுவனமும் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். அதற்குத் தேவையான சட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு செயற்படாத நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். -என்றார். (அ)

# யாழ்.பல்கலையில் இன்று உலக நாடக விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா இன்று புதன்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ராகுராம் சிறப்பு விருந்திராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ள உலக நாடக தினவிழாவில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் இடம்பெறவுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட அனைவரும் இவ்நாடக விழாவில் பங்கேற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வட்டி வீதத்தை குறைக்க மத்திய வங்கி தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 27

இலங்கை மத்திய வங்கி தனது கொள்கை வட்டி வீதத்தை மேலும் குறைக்க தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதன்படி, துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஆகியவற்றை முறையே 50 அடிப்படை புள்ளிகளால் 8.5 சதவீதம் மற்றும் 9.5 சதவீதமாகக் குறைக்க நாணயக் கொள்கைச் சபை தீர்மானித்துள்ளது.

இதன் பலன்கள் வணிகங்கள் மற்றும் குடும்பங்களுக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்ய அனைத்து நிதி நிறுவனங்களும் சந்தைக் கடன் வட்டி வீதங்களை குறைக்க விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை நாணயக் கொள்கை சபை வலியுறுத்தியுள்ளது. (அ)

# 17 வகையான மருந்துகள் தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 27

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மேலும் 17 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படாத பல வகையான மருந்துகள் இதில் உள்ளடங்கியுள்ளதாக அதன் பிரதி பணிப்பாளர் நாயகம், வைத்தியர் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையாகவுள்ள மருந்துகளுக்கான மாற்று மருந்துகள் இருப்பதாக கூறிய பிரதி பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)

# இளநீர் ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு ஒரு மாதத்தில் 3,400 மில்லியன் ரூபா!

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் இளநீர் ஏற்றுமதி மூலம், 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் சுமார் 3,439 மில்லியன் ரூபா என தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையின் இளநீர் ஏற்றுமதி மூலம், கடந்த 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 2,705 மில்லியன் ரூபாவாகும்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில், ஈட்டப்பட்ட வருமானம் 734 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார். (அ)

# தேர்தல் நடத்தாவிட்டால் அதற்கு முன்பே ஜனாதிபதி ரணில் வீடு செல்ல நேரிடலாம்

## கனடாவில் கூறினார் அநுரகுமார



கொழும்பு, மார்ச் 27

ஜனாதிபதி தேர்தலை ரணில் விக்கிரமசிங்க நடத்துவாரா என சிலர் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படாவிட்டால் தேர்தலுக்கு முன்னதாகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு வீடு செல்ல நேரிடும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கனடாவில் இலங்கையர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அநுர மேலும் கூறியவை வருமாறு,

"எமது நாடு தற்போதைய நிலையில் இருந்து மீள வேண்டுமெனில் அரசியல் மாற்றம் அவசியம். அதனை செய்வதற்கு இவ்வருடம் சிறந்த காலப்பகுதியாகும். செப்ரெம்பர் 17 மற்றும் ஒக்ரோபர் 17 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும். பெரும்பாலும் செப்ரெம்பர் 28 அல்லது ஒக்ரோபர் 05 ஆம் திகதி அத்தேர்தல் நடத்தப்படக்கூடும். விமான ரிக்கெட்டுகளை நீங்கள் ஒதுக்க வேண்டும் என்பதாலேயே முன்கூட்டியே திகதியையும் சொல்லி வைக்கின்றேன்.

மாகாணசபைத் தேர்தல் ஐந்து வருடங்கள் நடக்கவில்லை, உள்ளாட்சிசபைத் தேர்தலும் ஓராண்டு இழுத்தடிக்கப்பட்டுள்ளது, எனவே, ஜனாதிபதி தேர்தல் வைக்கப்படுமா என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ஜனாதிபதி தேர்தலை உரிய காலப்பகுதிக்கு நடத்தாமல் இருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முற்பட்டால் அவருக்கு முன்கூட்டியே வீடு செல்ல நேரிடும். தேர்தல் நடத்தப்பட்டால் உரிய காலப்பகுதிக்குள் உரிய வகையில் செல்லலாம். தேசிய மட்ட தேர்தலின்போது பாடம் புகட்டுவதற்காகவே மக்கள் மௌனம் காத்திருக்கின்றனர்." - என்றார். (அ)

# காலாவதியான பொருட்கள் விற்பனை குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27

வரவிருக்கும் ஏப்ரல் பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு தள்ளுபடி விற்பனை என்ற போர்வையில் காலாவதியான பொருட்களை புழக்கத்தில் விடக் கூடும் என பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்திற்காக நடத்தப்படும் பல்வேறு மொத்த விற்பனை / தள்ளுபடி விற்பனையின் போது பொதுமக்கள் ஏமாற்றப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

பொருட்களுக்கு தள்ளுபடி மற்றும் பேரம் பேசும் இடங்களில் காலாவதி திகதியில் திருத்தம் செய்வதன் மூலம் காலாவதியான பொருட்கள் விற்கப்படவாய்ப்பு உள்ளது என்று எச்சரித்த அவர்,

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும், பொருட்களை கொள்வனவு செய்யும் போது பொருட்களின் தரத்தை ஆராயுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விற்பனையாளர்களால் பதுக்கல், நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் காலாவதியான பொருட்களை திருத்தப்பட்ட காலாவதி திகதிகளின் கீழ் விற்பனை செய்தல் ஆகியவற்றைத் தடுக்க நுகர்வோர் விவகார அதிகார சபை தொடர்ச்சியான சோதனைகளை நடத்தும் என்றும் அவர் கூறினார்.

பொருட்களை வாங்கும் போது இதுபோன்ற பிரச்னைகளை எதிர்கொள்ளும் பொது மக்கள், நுகர்வோர் விவகார அதிகார சபை அலுவலகம் அல்லது அவர்களின் 1977 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# 28 லட்சம் குடும்பங்களுக்கு அரிசி வழங்க நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் குறைந்த வருமானம் பெறுகின்ற 28 இலட்சம் குடும்பங்களுக்கு 20 கிலோகிராம் அரிசி வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் உள்ளனர். கடந்த ஆண்டு, 28 லட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கினோம். அதேபோன்ற மாவட்ட அரசாங்க அதிபர்கள் மூலம் இதனை கணக்கிட்டு, 20 கிலோ அரிசியை வெளிப்படையாக வழங்குவோம்.

28 இலட்சம் குடும்பங்களுக்கும் இரண்டு கட்டங்களாக இதனை வழங்க உள்ளோம். ஏப்ரல் மாதம் 10 கிலோவும் மே மாதம் 10 கிலோ வங்க எதிர்பார்க்கின்றோம். சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் 10 கிலோ அரசியை வழங்கவுள்ளோம். இது அரசாங்கத்தின் பரந்த நோக்கமாகும்.

விவசாயிகளுக்கு இதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் விலையை உயர்த்துவது மறுபுறம் சிறிய மற்றும் நடுத்தரமில் உரிமையாளருக்கு வருமானம் ஈட்ட இது ஒரு சந்தர்ப்பமாக அமையும்-என்றார். (அ)

## அக்குபஞ்சர்...

உயிரிழந்தார்.

அவரின் உடற்கூற்று பரிசோதனையில், அக்குபஞ்சர் சிகிச்சை என தவறான முறை களில் செலுத்தப்பட்ட ஊசிகள் மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு அவை உடல் முழுவதும் பரவியதால் மரணம் சம்பவித் துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஊதிய...

ஊழியர்களின் சம்பள உயர்வு, மறுபரிசீலனை போன்ற காரணங்களால் நான் வெளியேறமாட்டேன் என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில், நிறுவன ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் பொறுப்பு எனக்கு உள்ளது. நான் அதை செய்தேன். அதனால் நான் விலகுவதற்கு இதனை ஒரு காரணமாக பார்க்கவில்லை.

தொழிற்சங்கங்களுடன் பேசியே மூன்று ஆண்டுகளுக்கு கூட்டு ஒப்பந்தம் மூலம் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## வட,கிழக்கில்...

வெளியிட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலவரம் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறியுள்ளது.

32 நாடுகளின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலவரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் இலங்கை தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்ந்தும் கரிசனைக்கு உரியதாகவே உள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதை முன்னிறுத்திய பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியிலும் அந்தச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதுடன் கருத்து வெளிப்பாடு மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் ஏனைய சட்டங்களும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் கடுமையான முறையில் அடக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் சமூகங்கள் படைத் தரப்பினரின் தொடர் கண்காணிப்புக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றன.

அதுமாத்திரமன்றி அப்பகுதிகளில் கரிசனைக்குரிய மட்டத்தில் காணி அபகரிப்புகள் அதிகரித்து வருவதுடன், சிலவேளைகளில் இவை மத வழிபாட்டுத் தலங்களை இலக்கு வைத்தவையாக உள்ளன. இவ்வாறான செயல்பாடுகள் சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளன.

உண்மை மற்றும் நல்லிணக்க விவகாரத்தில் முன்னேற்றத்தை அடைவதற்கான கடப்பாட்டை இலங்கை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. எனினும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் எவையும் 2023 ஜூன் மாதமளவில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கை தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் நாம் சமர்ப்பித்த அறிக்கையில் யுத்தத்துக்கும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்குக்கும் வழிவகுத்த அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து களைவதற்குரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வெளிப்படைத்தன்மை - பொறுப்புக்கூறல் - அனைவரையும் உள்ளடக்கிய தன்மை என்பன பேணப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம் - என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## ஹெகலியவுக்கு..

முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இதன்படி, முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கைத் தொடர கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேநேரம், 2012 மார்ச் 15 ஆம் திகதி முதல் 2012 ஏப்ரல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அப்போதைய வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல அரச நிதியிலிருந்து 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயை தனிப்பட்ட தேவைக்காக செலவு செய்தமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மைத்திரி...

சிறிசேன வழமையான கேள்விகளை எதிர்கொண்டார் என சி. ஐ. டி. வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கண்காணிப்பில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விசாரணைகளை முன்னெடுத்தார். குறுக்கு விசாரணைகளும் நடைபெற்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரிகள் யார் என்பது மூன்று வாரங்களுக்கு முன்பே தனக்கு தெரியவந்ததாக விசாரணையின்போது தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, தனக்கு யார் அந்த விடயத்தைத் தெரிவித்தார் என்பதைக் கூறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி தெரிவித்த விடயங்களை மீளாய்வு செய்வோம் என தெரிவித்துள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர் சட்டமா அதிபரின் உத்தரவின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்போம்- என்றார்.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி தெரிவித்த விடயங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சி. ஐ. டியினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## முருகன்...

இவர்களில் சாந்தன், முருகன், ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ் ஆகியோர் இலங்கையர்கள் என்பதால் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டனர். இதில், சாந்தன் இலங்கை திரும்பவிருந்த நிலையில் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி உயிரிழந்தார். ஏனைய மூவரும் தொடர்ந்து திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

முருகனின் மனைவி நளினி தனது கணவர் லண்டனில் வசிக்கும் தங்கள் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் இலங்கையரான தனது கணவர் கடவுச்சீட்டை பெற இலங்கை துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் செல்ல உத்தரவிடுமாறு கோரி நீதிமன்றை நாடியிருந்தார்.

இதற்கிடையே, முருகன், றொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் தனிப்பட்ட நாடு திரும்ப அனுமதி கோரிய இந்திய அரசாங்கத்துக்கு கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

இந்த நிலையில், மூவருக்கும் இலங்கை துணைத் தூதரகம் கடவுச்சீட்டு வழங்கியுள்ளது. இன்னும் ஒரு வாரத்தில் இலங்கை செல்ல மத்திய அரசு அனுமதி அளிக்கும். அனுமதி கிடைத்தவுடன் மூவரும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று உயர்நீதிமன்றில் தமிழ்நாடு அரசு தெரிவித்தது. (ஐ)

# தனங்களப்பு விபத்தில் இளைஞர்கள் இருவர் காயம்!

சாவகச்சேரி, மார்ச் 27

தென்மராட்சி - தனங்களப்பு பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் நடந்த விபத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர்.

ஏ - 32 வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கார் தனங்களப்பு சந்திக்கு அண்மையாக சைக்கிளில் பயணித்த இருவரை மோதித் தள் ளியது.

இதில், சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் காயமடைந்தனர். இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

## கோப்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தமது பதவி விலகல் கடிதங்களைக் கையளித்துள்ளனர்.

இவர்கள் தவிர, இராச மாணிக்கம் சாணக்கியன், அநுர குமார திசாநாயக்க, வசந்த யாப்பா பண்டார, தயாசிறி ஜயசேகர, காமினி வலேபொட, ஹேஷா விதானகே ஆகியோர் தாம் விலகினர் என்று பாராளுமன்றில் அறிவித்த போதும் எழுத்துமூல அறிவிப்பை கையளிக்கவில்லை.

இவர்கள், எழுத்துமூலம் தெரியப்படுத்தும் வரையில் அவர்களின் பதவி விலகல் செல்லுபடியாகாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேநேரம், பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்த உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் பணிமனைக்கு அறிவித்துள்ள போதிலும், அது தொடர்பில் இதுவரை பதில் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம், கோப் குழுவின் தலைவராக சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ரோஹித அபேகுண வர்த்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தக் குழுவின் உறுப்பினர்கள் பதவி விலகினர்.

31 உறுப்பினர்களைக் கொண்ட கோப் குழுவில் ஆளும் கட்சியின் சார்பில் 19 பேரும் எதிர்க்கட்சியின் சார்பில் 12 பேரும் நியமிக்கப்படுகின் றனர். பதவி விலகலை தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 18ஆகவும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8ஆகவும் குறைந்துள்ளது. எனினும், கோப் குழு கூடுவதற்கு 5 உறுப்பினர்களின் பிரசன்னமே போதுமானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சகல...

மக்களுக்கு இடையூறில்லாமல் பரிசோதனைகளை நடத்தவும் தேவையேற்படின் உடல்சோதனையை நடத்தவும் இது தொடர்பில் தேவாலய நிர்வாகங்களுடன் இணைந்து செயல் படவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கையில் முப்படைகள், விசேட அதிரடிப் படையினரின் உதவிகளைப் பெறுமாறும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேசமயம், கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பில் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் 270 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந் தனர். பலர் அங்கவீனர்களாகினர். இந்தத் தாக்குதல் இடம்பெற்று 5 வருடங்கள் பூர்த்தியாகின்றது. இதே போன்றதொரு அசம்பாவிதம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையு டனேயே நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கீரிமலை...

பகுதியை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதற்காக காணியை அளவீடு செய்வதற்காக நில அளவை திணைக்களத்தினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் அங்கு வந்தனர்.

இதன்போது குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை மறித்தும் போராட்டம் நடத்தினர்.

மக்களின் நீண்டநேர எதிர்ப்பாலும் தமது காணியை அரசாங்கம் சுவீகாரம் செய்வதற்கு தங்களுக்கு சம்மதம் இல்லை என்றும் காணி உரிமையாளர்கள் எழுத்துமூலமாக வழங்கியதை அடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து சென்றனர்.

இந்தப் போராட்டம் நடைபெற்ற போது அந்தப் பகுதியில் பெருமளவிலான பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவின்கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளில் 12.0399 ஹெக்ரெயர் ( 29 ஏக்கர் 3 றூட் 0.20 பேர்ச் ) நிலம் அளவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியா...

தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் பிரமாண பத்திரத்தில் இந்திய மத்திய அரசாங்கம் இதனை குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் அல்லது டிசெம்பரில் மீன்பிடி தொடர்பான இந்திய - இலங்கை கூட்டு செயல்குழுவின் ஆறாவது கூட்டத்தை நடத்த முன்மொழியப்பட்ட போதிலும் உள்நாட்டு பிரச்னைகளால் அந்தத் திட்டம் பலனளிக்கவில்லை என இந்திய மத்திய அரசாங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இந்திய வெளியுறவு அமைச்சு இந்த கூட்டத்தைக் கூடிய விரைவில் நடத்த நடவடிக்கை எடுத்து வருவதாக இந்திய மீன் வளத்துறை அமைச்சு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இரு நாட்டு மீனவர்களுக்கு இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில், 2016 ஆம் ஆண்டு நடந்த அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இந்திய - இலங்கை கூட்டு செயல்குழு உருவாக்கப் பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, 2017-18 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழகத்தின் பாரம்பரிய மீனவர்களுக்கு இழுவைமடி படகுகளுக்குப் பதிலாக 750 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை கொள்வனவு செய்ய உதவியாக தமிழக அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் 300 கோடி இந்திய ரூபாயை விடுவித்தமையும் இதன்போது நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிக்கும் வகையில், இராமேஸ்வரம் குந்துகால் பகுதியில் மீன்பிடி இறங்கு தளமொன்றை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டுவதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை இந்திய கடலோர காவல்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதாகவும், இந்திய மத்திய அரசாங்கம் தாக்கல் செய்துள்ள

பதில் சத்தியக்கடதாசியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதில் சத்தியக்கடதாசியை ஆராய்ந்த நீதிபதிகள், பொதுநல வழக்கை எதிர்வரும் ஜூன் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பெலாரஸ் ஜனாதிபதி ரணிலுக்கு வாழ்த்து

கொழும்பு, மார்ச் 27

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு இலங்கை சிறந்த உதாரணம் என பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 75 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

"இன்று, இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்த முயற்சியில் நீங்கள் எப்போதும் பெலாரஸ் குடியரசின் ஆதரவை நம்பலாம்.

இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பெலாரஸ் - இலங்கை ஒத்துழைப்பை ஒரு புதிய நிலைக்கு கொண்டு வர முடியும் என்றும் தான் உறுதியாக நம்புவதாகவும்" அவர் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

பெலாரஸ், இயந்திர பொறியியல், உலோகம் மற்றும் மரச் செயலாக்கம், மின்சார சக்தி, மருந்துப் பொருட்கள் போன்ற துறைகளில் திறன்களைக் கொண்டுள்ளது.

இந்நிலையில், உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பயங்கரவாதிகளைக் கண்டுபிடிக்க ஜனாதிபதி ஆர்வம் காட்டவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு பதிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவது சிறந்தது.

தாக்குதலுக்கு காரணமான பயங்கரவாதிகளை கண்டுபிடிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அக்கறை காட்டுவதில்லை.

ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரை அழைத்து விசாரணைகளை மேற்கொள்வதாக கூறினாலும் எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை.

ஏனென்றால், இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை தேடுவதில் அவருக்கு விருப்பமில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகளில் ஈடுபாடு காட்டாமை பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது". எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

# 64 பொருட்களுக்கான விசேட வர்த்தக வரி நீக்கம்

கொழும்பு, மார்ச் 27

சுமார் 64 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட விசேட வர்த்தக வரி நீக்கப்பட்டுள்ளது.


இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்த வரியை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்கள் காரணமாக இதனை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

210 எச்.எஸ் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 64 வகையான பொருட்கள் இதில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை நோக்கிப் பயணித்த கப்பல் மோதி இடிந்தது பாலம்!

## 20 இற்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கியுள்ளதாக தகவல்



நியூயோர்க், மார்ச் 27

**அமெரிக்காவில் பாலமொன்றின் மீது சரக்கு கப்பல் மோதியதில் பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது.**

**மேரிலாண்ட் மாகாணத்தில் அமைந்துள்ள பால்டிமோர் பாலம் மீது சரக்கு கப்பல் நேற்று அதிகாலை மோதியுள்ளது.**

இதன்போது பாலத்தில் சென்றுக் கொண்டிருந்த பல வாகனங்கள் நீரில் மூழ்கி 20 இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூர் கொடியுடன் பயணித்த "டாலி" என்ற கப்பலே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த கப்பல் கொழும்பு நோக்கி பயணித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாலத்தின் மீது சரக்கு கப்பல் மோதும் காணொளி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மீட்பு பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் இரும்பு திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 27

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்து இரும்பு திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் , ஒரு தொகை இரும்பு கம்பிகளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்குள் வாகனம் ஒன்றில் அத்துமீறி நுழைந்து இருவர் இரும்பு திருட்டில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் , அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் திருட்டில் ஈடுபட்ட இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களையும் , அவர்களது வாகனத்தையும், அவர்களால் திருடப்பட்ட ஒரு தொகை இரும்பு கம்பிகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் பேஸ்புக் பக்கம் மீது சைபர் தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 27

வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கம் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதலின் பின்னர் ஹேக்கர்களால் அமைச்சரின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இணைய விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு வகையான வீடியோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை முதல் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

சைபர் தாக்குதல் தொடர்பில் அமைச்சர் தரப்பில் இருந்து இது வரை எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. (அ)

# சஜித் கட்சியிலிருந்து அசிங்கப்படாமல் தாய்வீடான ஐ. தே. கவுக்கு வாருங்கள்!

## பாலித ரங்கே பண்டார

கொழும்பு, மார்ச் 27

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு சென்றவர்களுக்கு தற்போது அங்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை. அதனால், எமது நண்பர்கள் தொடர்ந்தும் அங்கிருந்து அசிங்கப்படாமல் தங்களின் தாய் வீட்டுக்கு மீண்டும் வருமாறு அழைப்பு விடுக்கிறேன். அவர்களுக்காக ஐக்கிய தேசிய கட்சியின் கதவு எப்போதும் திறந்தே இருக்கும்.

- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் எமது நண்பர்கள் மீண்டும் தங்களது தாய் வீட்டுக்கு வருமாறு அன்புடன் அழைக்கிறேன். ஏனெனில், அவர்களுக்கு தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இடமில்லை. அதனால் தொடர்ந்தும் எமது நண்பர்கள் அங்கு இருப்பதால், அவர்கள் கோழைகளாக்கப்பட்டு மலினப்படுத்தப்படும் நிலையே ஏற்படும். தாய் கட்சியின் செயலாளர் என்றவகையில் பொறுப்புடன் இந்த அழைப்பை விடுக்கிறேன். ஐக்கிய தேசிய கட்சியின் கதவு எப்போதும் அவர்களுக்காக திறந்தே இருக்கும்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் கடந்த காலங்களில் இருந்துவந்த முரண்பாடுகளால் கட்சியை விட்டு பிரிந்துசென்று சஜித் பிரேமதாஸமீது நம்பிக்கை வைத்து அவரை பலப்படுத்த நடவடிக்கை எடுத்தார்கள். அதில் நியாயம், அநியாயம் இருக்கலாம். ஆனால், தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் அவர்களுக்கு இருந்துவந்த இடத்தை வேறு நபர்கள் உரித்தாக்கியுள்ளனர். நாலக கொடஹேவா, ஜீ. எல். பீரிஸ் போன்றவர்களின் ஆலோசனை வழிகாட்டலின் பிரகாரமே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் செயல்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையை கட்டியெழுப்பவே ஐக்கிய மக்கள் சக்தி அமைத்துக்கொண்டு பிரிந்து சென்றார்கள். ஆனால், தற்போது அந்த நோக்கத்தை செயல்படுத்த அங்கு இவர்களுக்கு இடமில்லை. பொருளாதாரம் தொடர்பில் ஹர்ஷடி சில்வாவின் ஆலோசனையைவிட நாலக கொடஹேவாவின் ஆலோசனைக்கே இடமளிக்கப்படுகிறது. இதனால் தொடர்ந்தும் அந்த கட்சியில் இருந்து கேவலப்படாமல் மீண்டும் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாலைதீவைத் தொடர்ந்து வங்கதேசத்திலும் “இந்தியா அவுட்” முழக்கம் - என்ன பிரச்னை?

மாலத்தீவைத் தொடர்ந்து, வங்கதேச அரசியலிலும் இந்தியா குறித்த விவாகரம் தற்போது சூடுபிடித்துள்ளது. ஆளும் அவாமி லீக் மற்றும் எதிர்க் கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) ஆகியவற்றின் தலைவர்களுக்கு இடையே அரசியல் ரீதியாக கடும் விவாதம் நடந்து வருகிறது.

இந்த விவாகரம் தொடர்பாக இந்தியாவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் சமூக வலைத்தளங்களிலும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

“இந்தியாவே வெளியேறு” என்று சொல்லப்படும் பிரசாரம் அல்லது இந்திய தயாரிப்புகளை புறக்கணிப்பது என்கிற முழக்கம், ஒரு சில எதிர்க்கட்சிகளால் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது சமூக வலைத்தளங்களிலும் அது வைரலாகி வருகிறது.

இந்த பிரசாரத்தை எதிர்க்கும் பலரும், இது வழக்கமான இந்திய எதிர்ப்பு அரசியலின் ஒரு பகுதிதான் என்று குறிப்பிடுகிறார்கள்.

இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர் சந்திப்பில் பேசிய வங்கதேச வெளியுறவுத்துறை அமைச்சர் ஹசன் மஹ்மூத், “இந்திய தயாரிப்புகளை புறக்கணிக்கும் கோஷத்தின் நோக்கம், சந்தையை சீர்குலைத்து பொருட்களின் விலையை உயர்த்துவதே ஆகும்” என்று கூறியுள்ளார்.

ஆனால், அனைத்து இந்திய தயாரிப்புகளையும் புறக்கணிப்பதன் மூலம் வங்கதேச சந்தையை அப்படியே வைத்திருக்க முடியுமா? என்ற கேள்வியை அவர் முன்வைத்துள்ளார்.

அதேசமயம், பி.என்.பி. கட்சியின் நிலைக்குழு உறுப்பினர் கயேஷ்வர் சந்திர ராய், இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்றும், பொதுமக்களிடையே உள்ள கோபத்தால்தான் இந்தியப் பிரச்னை அரசியல் விவாதமாக மாறியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

இது குறித்து பேசிய அவர், “உண்மையில் தேர்தல்கள் எந்த பாதுகாப்புமே இல்லாமல் இந்தியாவால் செயல்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக மக்களால் வாக்களிக்க முடியவில்லை அல்லது அவர்களின் வாக்களிக்கும் உரிமை பறிபோகிறது. இது மக்களிடம் வெறுப்பை உருவாக்கியுள்ளது. பி.என்.பி. கட்சியால் மக்களின் வெறுப்பை அகற்ற முடியாது” என்று கூறுகிறார்.

மறுபுறம் பேசிய அவாமி லீக் கட்சியின் மூத்த தலைவரும் ஜவுளி மற்றும் சணல் துறை அமைச்சருமான அப்துர் ரஹ்மான், “இது பிஎன்பியின் இந்திய எதிர்ப்பு அரசியலின் தொடர்ச்சி என்றும், அவர்கள் அரசியல் ஆதாயங்களுக்காக இதைச் செய்தாலும், மக்கள் அதை நிராகரித்துவிட்டனர்” என்று கூறியுள்ளார்.

ஆனால் இந்தியப் பிரச்சினையில் பி.என்.பி.யும் அவாமி லீக்கும் ஏன் முரண்படுகின்றன?

டாக்கா பல்கலைக்கழகத்தின் அரசியல் ஆய்வாளரும் ஆசிரியையுமான ஜோபைடா நஸ்ரீன், இந்தியா மீதான பி.என்.பி மற்றும் அவாமி லீக்கின் நேரெதிரான அறிக்கைகளுக்கான காரணங்கள் பற்றி பேசினார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “பி.என்.பி.யோ அல்லது அதை போன்ற ஒத்த எண்ணம் கொண்ட கட்சிகள் மற்றும் தலைவர்களோ இந்திய தயாரிப்புகளை புறக்கணிப்பது அல்லது இந்தியாவை எதிர்க்கும் போது, அவாமி லீக் கட்சி அரசியல் காரணங்களுக்காக இந்தியாவின் பங்கை நியாயப்படுத்த முயற்சி செய்கிறது” என்று கூறுகிறார்.




வங்கதேசத்தின் எதிர்க்கட்சியான பி.என்.பி. இந்தியாவை எதிர்ப்பது வரலாற்றில் இது ஒன்றும் புதிதோ அல்லது முதல்முறையோ அல்ல.

ஆனால் கடந்த பத்து-பதினைந்து ஆண்டுகளில், பல்வேறு சமயங்களில் இதே கட்சியின் ஒரு பிரிவினர் இந்தியாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்துள்ளனர். ஆனால், சில சமயங்களில் கட்சியின் இந்தியாவுக்கு எதிரான குழு பலமாகி, ஆதரவு குழுவின் முயற்சிகளை சீர்குலைத்து விட்டது.

இதற்கு முக்கிய உதாரணமாக, 2013ஆம் ஆண்டு அப்போதைய இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி டாக்கா சென்றிருந்த போது, அன்றைய எதிர்க் கட்சித் தலைவராக இருந்த பி.என்.பி. தலைவர் கலீதா ஜியா அந்தக் கூட்டத்தை ரத்து செய்ய முடிவெடுத்ததை பலரும் குறிப்பிட்டு சொல்கின்றனர்.

பின்னர், பிரதமர் நரேந்திர மோதி டாக்கா சென்ற போது அவரை ஹோட்டலில் வைத்து சந்தித்தார் ஜியா



என்பதும் வரலாறு.

2014 ஆம் ஆண்டு வங்கதேசத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலை பி.என்.பி புறக்கணித்த போதிலும் தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலுக்கு முன்பு இந்திய அதிகாரிகளின் தொடர் செயல்பாடு அங்கு தென்பட்ட போதிலும், பி.என்.பி அதைப் பற்றி அதிகம் பேசவில்லை.

ஆனால், 2018 தேர்தலுக்குப் பிறகு, பிஎன்பி இந்தியாவின் பிரச்னையை நோக்கி நகர்வதை போல் தெரிந்தது. 2019ஆம் ஆண்டு பிரதமர் ஷேக் ஹசீனாவின் இந்தியப் பயணத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பி.என்.பி. போராட்டத்தில் இறங்கியது.

வங்கதேச சுதந்திரத்தின் பொன்விழா நிகழ்ச்சிக்காக 2021ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி டாக்கா வருவதை எதிர்த்து வங்கதேசத்தில் வன்முறைப் போராட்டங்கள் வெடித்தன. இது இந்தியாவுக்கும், பி.என்.பி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலான இடைவெளியை அதிகப்படுத்தி விட்டதாக பலரும் நம்புகின்றனர்.

12வது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பிருந்தே, பி.என்.பி., இந்தியாவின் பங்கு குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தி வந்தது.

இந்தியாவின் பிடிவாதமான அணுகுமுறையால், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்காக அவாமி லீக் அரசாங்கத்தின் மீது அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கொடுத்த அழுத்தம் நீர்த்துப்போய் விட்டது என்று பி.என்.பி கட்சியின் தலைவர்கள் நம்புகின்றனர்.

பி.என்.பி நிலைக்குழு உறுப்பினர் கயேஷ்வர் சந்திர ராய் பேசுகையில், “தேர்தல் வந்த உடனே இந்திய தலை




வர்கள் செயல்பட தொடங்கி விடுகிறார்கள். இந்நிலையில் நான்கு தேர்தல்களாக வாக்களிக்க முடியாமல் இருப்பதால் மக்கள் மனதில் கோபம் எழுந்துள்ளது. அந்த கோபமே மக்கள் இயக்கமாக மாறியுள்ளது. மக்கள் இயக்கத்தை தடுப்பது ஒன்றும் பி.என்.பியின் வேலை இல்லை” என்று கூறுகிறார்.

கானா ஓதிகார் பரிஷத் தலைவரும், டாக்கா மத்திய பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் முன்னாள் துணைத் தலைவருமான நூருல் ஹக் நூர், தேர்தல் முடிந்த சில நாட்களிலேயே இந்தியாவை புறக்கணிக்கும் குரலை முதலில் எழுப்பினார்.

அதன் பிறகே, “இந்தியா அவுட்” இயக்கம் அல்லது இந்திய தயாரிப்புகளை புறக்கணிக்கும் இயக்கம் தொடங்கியது. மார்ச் 21 அன்று, பிஎன்பி செய்தித் தொடர்பாளரும், மூத்த இணைச் செயலாளருமான ருஹுல் கபீர் ரிஸ்வி இந்த இயக்கத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

இதற்கு எதிர்வினையாற்றும் விதமாக ஆளும் அவாமி லீக் கட்சியின் பொதுச் செயலாளர் ஒபைதுல் குவாடர் ஒரு நிகழ்வில், பி.என்.பி கட்சி எந்த அரசியல் பிரச்னையும் இல்லாமலேயே, இந்தியாவை எதிர்க்கத் தொடங்கியுள்ளது என்று தெரிவித்தார்.

“பாகிஸ்தான் காலகட்டத்தில் இருந்தே எந்த விதமான அரசியல் பிரச்னையும் இல்லாமல் அவாமி லீக்கிற்கு எதிராக இதே பிரச்னை கொண்டு வரப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். அது முன்பு பங்கபந்துவுக்கு எதிராக இருந்தது, இப்போது ஷேக் ஹசீனாவுக்கு எதிராக உள்ளது. அதுதான் இந்திய எதிர்ப்பில் உள்ள பிரச்னை” என்று கூறினார் அவர்.

முன்னதாக, மார்ச் 16 அன்று சமூக ஊடகங்களில் வெளியான “இந்தியா அவுட்” பிரசாரத்தை குவாடர் விமர்சனம் செய்திருந்தார். அப்போது அவர், “இந்தியாவுக்கு எதிரான உணர்வைத் தூண்டும் முயற்சிகள் ஏன்? தேர்தலில் பங்கேற்காதவர்கள் இந்தப் பிரசாரத்தை கேடயமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவாமி லீக் ஆட்சியில் உள்ள போது, இந்தியாவுக்கு எதிரான குழு இணைந்து கொள்கிறது. இந்த நேரத்தில் பிஎன்பி இதைத்தான் செய்து கொண்டிருக்கிறது.” என்று கூறியிருந்தார்.

கடந்த மார்ச் 22ஆம் தேதி கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலும் அவர் இதுகுறித்துப் பேசினார்.

அந்த சந்திப்பில், “இந்திய தயாரிப்புகளை புறக்கணிக்கிறோம் என்ற போர்வையில், நாட்டின் சந்தை அமைப்பை சீர்குலைக்கும் ஆழமான சதியில் பி.என்.பி. ஈடுபட்டுள்ளது. பி.என்.பி.யின் வேண்டுகோளுக்கு மக்கள் முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள்” என்று கூறியிருந்தார் அவர்.

மறுபுறம், பி.என்.பி துணைத் தலைவர் மற்றும் ஓய்வு பெற்ற மேஜர் ஹபீசுதீன் அகமது, “இன்னொரு நாட்டிடம் மண்டியிடும் வெளியுறவுக் கொள்கையே தற்போதைய ஆளும் கட்சியின் வழக்கமாக உள்ளது. டெல்லி எங்கு உள்ளதோ, அவர்களும் அங்குதான் இருக்கிறார்கள். இதை சொல்வதில் அவாமிக்கு வெட்கமே இல்லை” என்று விமர்சித்தார்.

எம்மோடு பேசிய கயேஷ்வர் சந்திர ராய், ”பி.என்.பி.




எந்த நாட்டுக்கும் எதிரானது அல்ல, ஆனால் தேசியவாத அரசியலுக்குத் தேவையானதைச் செய்யும். ஒவ்வொரு முறையும் இந்தியா நம் நாட்டின் தேர்தல்களில் தீவிரமாக தலையிட்டு, மக்களின் வாக்குரிமையைப் பறித்துள்ளது. எனவே மக்கள் கிளர்ந்தெழுகிறார்கள். நாம் ஏன் அதைத் தடுக்க வேண்டும்?” என்று கூறினார்.

மறுபுறம், “ஒரு தீய சக்தி திடீரென இந்தியாவுக்கு எதிரான பிரச்னையை அரசியலாக்கி அரசியல் ஆதாயம் தேட முயல்கிறது. அதை பொதுமக்கள் நிராகரித்துள்ளனர்” என்று அமைச்சர் அப்துர் ரஹ்மான் தெரிவித்தார்.

மேலும் ஜனநாயகத்தின் நலன் கருதி, இந்தியா உட்பட அனைத்து கூட்டாளி நாடுகளும் 12வது நாடாளுமன்றத் தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்த உதவி செய்துள்ளன என்று கூறினார்.

### சர்ச்சைக்கான காரணம் என்ன?

டாக்கா பல்கலைக்கழகத்தின் அரசியல் ஆய்வாளரும் ஆசிரியையுமான ஜூபைதா நஸ்ரீன், வங்கதேச அரசியலில் இந்தியா எப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது, எனவே தற்போதைய சூழ்நிலையிலும் இந்தியாவுக்கு பங்கு உண்டு என்று கூறுகிறார்.

இதுகுறித்து பேசிய அவர், “பி.என்.பி. மற்றும் அதை ஒத்த சித்தாந்தம் கொண்ட எந்தவொரு கட்சியும் இந்திய தயாரிப்புகளை புறக்கணிக்கவோ அல்லது இந்தியாவுக்கு எதிராகப் பேசுவதற்கோ முற்படும் போது, அரசியல் காரணங்களுக்காக அவாமி லீக் பதிலளிக்க வேண்டியுள்ளது” என்கிறார்.

அவரது கருத்துப்படி, இரண்டு கட்சிகளின் அரசியலிலும் இந்தியாவுக்கு செல்வாக்கு உள்ளது.

“இந்தப் பிரச்னையில் பொதுமக்களின் உணர்வுகளை பி.என்.பி தூண்டும் நிலையில், இந்தியாவுடன் நல்லுறவில் இருக்கும் புள்ளியில் இருந்து அவாமி லீக் அதற்கு ஆதரவாக பேச வேண்டிய தேவை உள்ளது”

“இந்திய எதிர்ப்பு என்ற பெயரில் அவாமி லீக் கட்சிக்கு எதிராக பொதுமக்களை தூண்டி விட நினைக்கிறது பி.என்.பி. இதுவே அவாமி லீக் தரப்பிலிருந்தும் எதிர் தாக்குதல்கள் வருவதற்கு காரணம்”

எதுவாகினும், இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நெருங்கி வருவதால், நாட்டின் எதிர்க்கட்சிகள் இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்தை தீவிரப்படுத்த அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று ஜூபைதா நஸ்ரீன் நம்புகிறார்.

“இந்திய தேர்தலில் வங்கதேசத்திற்கு அவ்வளவாக செல்வாக்கு இல்லை. பி.என்.பி மற்றும் அவாமி லீக் இடையேயான பேச்சுவார்த்தையும் அவர்களுக்கு முக்கியமல்ல. ஆனால் நரேந்திர மோதி மீதான வெறுப்பு பி.என்.பி.யில் அதிகரித்துள்ளது.”

எனவே, “இந்தியத் தேர்தலை மனதில் வைத்து, வங்கதேசத்தில் மோதிக்கு எதிரான உணர்வை மேலும் தூண்டுவதற்கு எதிர்க்கட்சிகள் வாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்கலாம். அதனால்தான் அரசியல் அரங்கில் இந்தியாவின் பிரச்னை உச்சத்தில் உள்ளது” என்கிறார் ஜூபைதா.

இங்கே, பி.என்.பி மற்றும் அவாமி லீக்கின் பிரச்னைகளுக்கு இடையில், முகநூலில் இந்திய தயாரிப்புகளை புறக்கணிப்போம் என்ற குழுவை உருவாக்கி ஒரு அணி இந்திய எதிர்ப்பு பிரசாரத்தை தொடங்கியுள்ளது. அதில் ஆயிரக்கணக்கானோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். ●

# தமிழ்நாடு அரசியல் களத்தில் சாதி: தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.கவின் தேர்தல் கணக்குகள் என்ன?

சாரதா வி



சாதி ஒழிப்பாக இருக்கட்டும், இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு கோரிக்கையாக இருக்கட்டும், தேர்தல் அரசியலில் சாதியின் முக்கியத்துவமாக இருக்கட்டும், சாதி என்ற கருத்தாக்கம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழக அரசியலில் எங்கும் நீக்கமற இருக்கிறது. இதே மாநிலம் தான், சாதிக்கு எதிராக நாட்டிலேயே வலுவான போராட்டங்களையும் கண்டுள்ளது. சாதி எதிர்ப்பின் அடையாளமாக ஒவ்வொருவரின் பெயருக்கு பின்னால் இருக்கும் சாதிப் பெயர்களை நீக்கியதும் இதே தமிழ்நாடுதான்.

சுயமரியாதை இயக்கத்தின் தந்தையான பெரியார், சாதிப் பிரச்னையால் காந்தியுடன் முரண்பட்டு 1925ம் ஆண்டு காங்கிரஸிலிருந்து வெளியேறினார். பிராமண மற்றும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு தனித்தனியாக உணவு வழங்குவதை எதிர்த்த பெரியார், அதை மாற்றியமைக்க முன்வரவில்லை என்றவுடன் கட்சியை விட்டு வெளியேறினார்.

எதிர்வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலிலும் சமூக நீதி, கூட்டாட்சி மற்றும் சுயமரியாதைக்கான சித்தாந்தங்களுடன் தேர்தல்களின் மிக முக்கியமான அம்சமாக சாதியும் தொடர்கிறது. குறிப்பிட்ட சமூகத்தினரின் குரலாக ஒலிக்கும் கட்சிகள் முதல் பிரதான கட்சிகள் வரை சாதியின் தாக்கம் இருக்கவே செய்கிறது, சில இடங்களில் இலைமறை காயாய், சில இடங்களில் பகிரங்கமாக. சாதி மட்டுமே இந்த தேர்தலை தீர்மானிக்கும் ஒற்றை காரணி இல்லை என்றாலும், சாதி கண்டிப்பாக அதன் பங்கை ஆற்றிக் கொண்டு தான் இருக்கிறது.

### தேர்தலில் நீடிக்கும் சாதி கணக்குகள்

தலைநகர் சென்னை தவிர தமிழ்நாட்டின் பிற வட மாவட்டங்களில் வன்னியர்கள், மேற்கு மாவட்டங்களில் கவுண்டர்கள் அதற்கு அடுத்த படியாக நாயுடு உள்ளிட்ட சாதிகளும், தென் தமிழ்நாட்டில் தேவர், மறவர், அகமுடையார் என்ற முக்குலத்தோர் மற்றும் நாடார் சமூகத்தினர் வேட்பாளர்களாக களமிறக்கப்படுகின்றனர்.

தனித் தொகுதிகளை பொருத்தவரை, வட தமிழ்நாட்டில் பறையர் பிரிவினரும், தென் தமிழ்நாட்டில் தேவேந்திர குல வேளாளர் பிரிவினரும் நிறுத்தப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. அதே சமயம் தேர்தல் களத்தை பொருத்து இந்த சூழல் மாறலாம். பொது தொகுதிகளில் தலித் வேட்பாளரை நிறுத்தி வெற்றிபெறுவதை சில சமயங்களில் கட்சிகள் முயற்சித்துள்ளன. ஆதிக்க சாதி அல்லாத மற்ற சாதிகளை நிறுத்தியும் திமுக, அதிமுக போன்ற கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

இந்த கணக்குகளை மனதில் வைத்துக் கொண்டே, 2024 நாடாளுமன்றத் தேர்தல்களிலும் கிட்டத்தட்ட அனைத்து கட்சிகளும், தங்கள் வேட்பாளர்களை தேர்த்நெடுக்கும் போது, அந்த தொகுதியின் பிரதான சமுதாயத்தை சேர்ந்தவரை நிறுத்தியுள்ளன. சென்னை நகர்ப்புற தொகுதிகள் மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.

### "மேற்குலகில் வகுப்பு பிரிவினை போல இந்தியாவில் சாதி"

தலித் விவகாரங்கள் குறித்த ஆய்வாளரும் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப்மண்ட் ஸ்டடீஸ் மையத்தின் முன்னாள் பேராசிரியர் சி லக்ஷ்மணன் "மேற்கத்திய நாடுகளில் தேர்தல்களில் எப்படி வகுப்பு தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறதோ அது போல இந்தியாவில் சாதி ஒரு முக்கியமான தீர்மானிக்கும் சக்தியாகவே தேர்தல்களில் இருக்கிறது.

ஒரு தொகுதியில் எது பெரும்பான்மையான சாதியோ அந்த சமூகத்தின் வேட்பாளர் தான் எல்லா தரப்பிலிருந்தும் நிறுத்தப்படுவார். மிக அரிதாகவே வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் ஒரு தொகுதியில் இருப்பதை காண முடியும். அப்படி இருந்தால் அதுவும் இரண்டாவது பெரிதாக ஒரு இருக்கும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை பெறுவதற்காகவே நிறுத்தப்படுவார்" என்கிறார்.

இந்த தேர்தல் களத்தில் பணியாற்றி வரும் பெயர் குறிப்பிட விரும்பாத அரசியல் பிரமுகர் ஒருவர் கூறும் போது, "இந்த முறை கோவையில், திமுக மற்றும் பாஜக சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர்கள் கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள். ஆனால் அதிமுக வேட்பாளர் நாயுடு சமூகத்தை சேர்ந்தவர்.

கொங்கு பகுதியில் கவுண்டர்கள் மத்தியில் அதிமுகவிற்கு அதிக செல்வாக்கு இருந்தாலும் வேற்று சமுதாய வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் அது தன் மேல் சாதி பிம்பம் வராமல் பார்த்துக் கொள்கிறது. அதே சமயம் எடப்பாடி பழனிச்சாமி, எஸ்.பி.வேலுமணி போன்ற தலைவர்களுக்காக விழும் கவுண்டர் வாக்குகளும், வேட்பாளர் தேர்வின் காரணமாக பிற சமுதாய வாக்குகளையும் கணிசமாக திரட்ட முடியும்" என்றார்.

### அரசியல் களத்தில் பாமக

இந்தியாவின் பிற பகுதிகளை போல தமிழ்நாட்டிலும் 90களில் சாதி ரீதியிலான அமைப்புகள் அரசியல் கட்சிகளாக உருவெடுக்க ஆரம்பித்தன.

1980 களில் பொருளாதாரத்தில் நலிந்தவர்களாக இருந்த வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கான போராட்டங்களை தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கப்பட்டது. 1980 களின் இறுதியில் மு. கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சி வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று வகைப்படுத்தி இட ஒதுக்கீடு வழங்கியது.



வன்னியர் வாக்குகளை கூடுதலாக பெற்ற பாமக, தனித்து வெற்றிபெற மற்ற சாதியினரின் வாக்குகளும் அவசியம் என்பதை கண்டது. எனவே 'சாதி கட்சி' என்ற அடையாளத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றது. ஆனாலும், சாதி வன்முறை, ஆணவக் கொலைகள் ஆகியவற்றில் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் அதனை சாதிய கட்சியாகவே மக்களிடையே பதிவு செய்கின்றன.

தலித் ஆண்கள் ஜீன்ஸ் மற்றும் கூலிங் கிளாஸ் அணிந்து பெண்களை கவர்கிறார்கள் என்று அவர்கள் முன்வைத்த வாதம் கடும் விமர்சனங்களை எழுப்பியது. தலித் அல்லாத சாதிக் கட்சிகளை திரட்டியதன் மூலமும், நத்தம் காலனி வன்முறை, இளவரசன் வழக்கு போன்றவற்றில் அந்த கட்சி மேற்கொண்ட நிலைப்பாடுகளும் சாதிய ரீதியான அணி திரட்டல் நோக்கத்துடனே அமைந்தன.

திமுக கூட்டணியில் கடந்த சில ஆண்டுகளாக பாமக






இடம் பெறாததற்கு, தலித் மக்களின் அரசியல் பிரதிநிதியாக கருதப்படும், விசிக இடம்பெற்றிருப்பதே முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

பேராசிரியர் சி லக்ஷ்மணன் "பட்டியலின மக்களுக்கு என தனித் தொகுதிகள் இருந்தாலும் பட்டியலினத்தவரை முழு சுதந்திரத்துடன் செயல்பட பெரிய கட்சிகள் அனுமதிக்கவில்லை. எனவே தான் சாதி அமைப்புகளாக இருந்தவை 1990களில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, புதிய தமிழகம் உருவாக காரணமாக இருந்தன" என்கிறார்.

தமிழகத்தில் பிரதானமாக மூன்று முக்கிய தலித் சாதிகள் உள்ளன. முதலாவதாக, மாநிலத்தின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் பறையர் சாதி பெரும்பான்மையாக உள்ளது. திருமாவளவன் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

இப்போது தேவேந்திர குல வேளாளர் என்று அழைக்கப்படும் பள்ளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சாதிகள் மாநிலத்தின் தெற்கிலும் கடலோர டெல்டா மாவட்டங்களிலும் உள்ளனர். டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையிலான புதிய தமிழகம் இவர்களை ஓரளவு பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அருந்ததியர்கள் மற்ற இருவருடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவர்கள். விசிக மற்றும் புதிய தமிழகம் இரண்டும் தத்தமது செல்வாக்கு உள்ள பகுதிகளில் அரசியல் கட்சி கட்டமைப்புக்களை கணிசமாக நிறுவியுள்ளன.

"கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் விசிக இரண்டு பொதுத் தொகுதிகள் உட்பட ஆறு தொகுதிகளில் போட்டியிட்டது. நான்கு தனித் தொகுதிகளில் பட்டியலின வேட்பாளர்களை நிறுத்திய விசிக, பொதுத் தொகுதிகளில் அவர்களை நிறுத்தவில்லை. தலித் அல்லாத வேட்பாளர்கள் தான் பொதுத் தொகுதிகளில் நிறுத்தப்பட்டனர். கிட்டத்தட்ட திமுக போன்ற அதே ஃபார்முலாவை தான் விசிக கையாள நினைக்கிறார்கள்" என்றார் லக்ஷ்மணன்.

### சரத்குமார், கருணாஸ் வேட்பாளரானது எப்படி?

மேற்கு மண்டலத்தில் கொங்கு வெள்ளாள கவுண்டர் சாதி அமைப்பில் இருந்து 2009 ஆம் ஆண்டு புதிதாக கொங்கு நாடு முன்னேற்ற கழகம் என்ற கட்சி உருவானது. அந்த கட்சி உடைந்து (2013) கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியை புதிதாக உருவாக்கினார் இஞ்சினியர் ஈஸ்வரன். கவுண்டர் சமூகத்தினருக்கு அரசு வேலைகளில் கூடுதல் இடம் வழங்க வேண்டும், மேற்கு மாவட்டங்களின் வளர்ச்சிக்கு கூடுதலான கவனம் உள்ளிட்ட கோரிக்கைகளை அந்த கட்சி வைக்கிறது.

அரசியல் அறிவியல் மூத்த பேராசிரியர் ராமு மணிவண்ணன் கூறுகையில், "சாதியை வைத்து வேட்பாளர் தீர்மானம் செய்யும் போதே, அது வாக்குவங்கி அரசியலாகிவிடுகிறது. பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்துவதும், சமரச அரசியலும் தொடங்கி விடுகிறது. ஆதிக்க சாதி மட்டுமல்லாமல் அந்த சாதியில் பணக்காரர் ஒருவரை தான் வேட்பாளராக தேர்வு செய்வார்கள்.

நடிகர் கருணாஸ் வேட்பாளராக்கப்பட சாதி என்ற அடையாளத்தை தவிர வேறு என்ன தகுதி இருந்தது?. அவர் அதிமுக அணியில் போட்டியிட்டு எம் எல் ஏ ஆனார். இது பெரிய கட்சிகள் செய்யும் தவறாகும்.

சரத்குமாரால் தனியாக ஏதாவது ஒரு தொகுதியில் நின்று வெற்றி பெற முடியுமா? அவர் சமூகத்தினரே அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள். ஆனால் திமுக அதிமுக பாஜக என எல்லா கட்சிகளும் அவருக்கு உதவி தான் வருகின்றன. இவரை பயன்படுத்திக் கொள்ளும் கட்சிகள் சந்தர்ப்பவாதிகள் என்றால், அவர்களை பயன்படுத்திக் கொள்ளும் சரத்குமார் அவர்களை விட மேலும் சந்தர்ப்பவாதியாவார். ராதிகாவின் நாயுடு பின்புலத்தையும் சினிமா அறிமுகத்தையும் கொண்டு விருதுநகரில் வாக்கு பெற நினைக்கிறார்கள்" என்றார்.

(16ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு அரசியல் களத்தில் சாதி:..

(15ம் பக்கத் தொடர்ச்சி)

**கொங்கு மண்டலத்தில் சாதியின் தாக்கம்**

சமீபத்தில் வள்ளி கும்மியாட்டத்தின் போது திண்டுக் கல்லில் குழுமியிருந்த பெண்களிடம் தங்கள் சமுதாய மணமகனையே திருமணம் செய்து கொள்வோம் என வாக்குறுதி பெற்றார் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி யின் பொருளாளர் கே.கே.சி.பாலு. அவர் 2021ம் ஆண்டு திமுக கூட்டணியில் சட்டமன்ற உறுப்பினர் வேட்பாள ராக நிறுத்தப்பட்டவர். தற்போது திமுக கூட்டணியில் நாமக்கல் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சூர்ய மூர்த்தி சில ஆண்டுகளுக்கு முன் சாதிய வன்மத்தை தூண்டும் வகையில் பேசிய வீடியோ வைரலாகி சர்ச்சையானதால், வேட்பாளர் மாற்றப்பட்டுள்ளார்.



சேலத்தை சேர்ந்த எடப்பாடி பழனி சாமி முதல்வரான 2017ம் ஆண்டுக்கு பிறகு கவுண்டர் சமூகத்தின் அணி திரட் டல் வலுவானது.

தேர்தல் களத்திலிருந்து நம்மிடம் பேசிய அரசியல் பிரமுகர் அரசியல் பிரமுகர் “கொங்கு நாடு முன்னேற்றக் கழகம் 2009ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில் 12 இடங்களில் போட்டியிட்டு எந்த இடத்தில் வெற்றிபெறவில்லை. ஆனால் ஆறு லட்சம் வாக்குகள் பெற்று, அதன் பின் வந்த தேர்தல்களில் தங்களுக்கான இடங்களைப் பெற அது உதவியது.

பாமகவுக்கு ஒட்டுமொத்தமாக 5 வீத வாக்குகள் இருக்கின்றன என்றாலும், வன்னியர்கள் அதிகமாக உள்ள தொகுதிகளில் அது 10 வீதமாக இருக்கும். நிச்சயமாக சில தொகுதிகளில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கக் கூடிய சக்தியாக அவர்கள் இருப்பார்கள். இவர்களால் பிற சாதிகளின் வாக்குகளை பெறுவது கடினமே.

தொகுதியில் கொங்கு கட்சி சார்பாக தலித் வேட்பாளர் ஒருவரை நிறுத்தினாலும் கவுண்டர் சமூகத்தினர் வீட்டு சுவர்களில் தலித் வேட்பாளர்களின் பெயர்கள் இடம் பெறாது. கட்சி சின்னம் மட்டுமே இடம் பெறும்” என்றார்.

**முக்குலத்தோர் வாக்குகள் யாருக்கு?**

சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திர போஸ் உருவாக்கிய கட்சி பார்வர்ட் பிளாக். தமிழ்நாட்டில் அது முத்துராமலிங்க தேவரின் காலத்திலிருந்து பார்வர்ட் பிளாக், அதன் தேவர் பிணைப்புகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த கட்சி தற்போது அதிமுக அணியில் உள்ளது. முத்துராமலிங்க தேவர் தனது காங்கிரஸ் எதிர்ப்பு நிலைப்பாட்டிற்காக அறியப்பட்டவர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பரான சசிகலாவின் சாதிப் பின்னணி, அந்த கட்சிக்கு முக்குலத்தோர் ஆதரவை பெற்றுக் கொடுத்தது. இப்போது அதே முக்குலத்தோர் வாக்குகளை பெற வேண்டும் என டி.டி.வி.தினகரன் மற்றும் ஓ.பன்னீர்செல்வம் இருவரும் விரும்புகிறார்கள். அப்போதுதான் அதிமுகவில் தங்கள் செல்வாக்கை மீட்க முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள்.

“முக்குலத்தோர் சமூகத்தின் ஆதரவு தனக்கு இருக்கிறது என நிரூபிக்க அவர்கள் அதிகபட்சமாக இருக்கும் தேனியில் நின்று அவர்களின் வாக்குகளை ஒன்றிணைக்க நினைக்கிறார் டிடிவி தினகரன். அதே போன்று, ராமநாதபுரத்தில் நிற்கும் இஸ்லாமிய வேட்பாளரை எதிர்த்து தேவர் வாக்குகளை திரட்டிவிட முடியும் என ஓ பி எஸ் நினைக்கிறார். இதன் மூலம் வாக்கு சத வீதத்தை அதிகரிக்க முடியும். அதன் மூலம் கட்சியில் தாங்கள் தான் முக்கு லத்தோர் சமூக பிரதிநிதி என்று நிரூபிக்க வேண் டும்.” என்றார்.

**நாடார் சமூகத்தினர் வாக்குகள் யாருக்கு?**

தென் தமிழ்நாட்டில் நாடார், தேவேந்திர குல வேளாளர் இருவருக்கு மத்தியிலும் செல் வாக்கை விரிவாக்க பாஜக விரும்புகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தனது அரசி யல் தளத்தை வலுப்படுத்திய பாஜக, நாடார் கள் மத்தியில் கிடைத்த செல்வாக்கை வலுப்படுத்தி பிற மாவட்டங்களில் நுழைய விரும்புகிறது. நாடார் வாக்கு வங்கியை நம்பியே உருவான நடிகர் சரத்குமாரின் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி பாஜகவுடன் இணைக்கப் பட்டது.

திமுக அதிமுகவிற்கும் நாடார் மத்தியில் கணிசமான செல்வாக்கு உள்ளது. இருப்பி னும், கனிமொழி கருணா நிதியை தூத்துக்குடி தொகுதி யில் நிறுத்தும் முடிவிற்கு அவரது தாயாரின் நாடார் சமூக பின்னணியும் ஒரு கார ணம் என்று அரசியல் பர் வையாளர்கள் தெரிவிக்கின்ற னர்.

“முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாததால் அவர்களுக்கான கவனிப்பு சற்று குறைவாகவே உள்ளது. ஒரு இஸ்லாமிய வேட்பாளரை நிறுத்தினால் எதிரில் பெரும்பான்மையாக இருக்கும் இந்து வேட்பாளரை நிறுத்தி வாக்குகளை திரட்டி விட முடியும் என்ற சூழல் உள்ளது. கிறித்தவர்கள் அதிகம் இருக்கும் கன்னியாகுமரியில், கிறித்துவ வேட்பாளரை நிறுத்தாமல் காங்கிரஸ் விஜய் வசந்தை நிறுத்தியுள்ளது. விஜய் வசந்த் நாடார் வாக்குகளையும் பெற முடியும், காங்கிரஸ் வேட்பாளர் என்பதால் கிறித்தவர்களின் வாக்குகளையும் பெற முடியும்.” என்றார் அரசியல் பிரமுகர்.

“ஒரு சமூகம் சார்ந்த தலைவர்கள் தனது சமூக மக்களுக்காக உழைத்தால் கூட பரவாயில்லை. அதையும் செய்வதில்லை. அந்த சாதியில் உள்ள ஏழை மக்கள் ஏழைகளாகவே தான் இருக்கிறார்கள்” என குறிப்பிட்டார் ராமு மணிவண்ணன்.





